பக்கங்கள்:-பத்து

*Registered as a News paper in Sri Lanka*

விலை ரூபா: 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# வலம்புரி
# VALAMPURI

ங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 18 செவ்வாய்க்கிழமை (01.04.2003) தொலைபேசி- 2223378 ஒலி 103

## திருமலையிலிருந்து புறப்பட்ட "லங்கா முடித்த" இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டது

### மூன்று படையினர் உட்பட 7 பேர் காயம்

(திருகோணமலை)

படையினரை ஏற்றிக் கொண்டு திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறையை நோக்கி வந்து கொண்டிருந்த "லங்கா முடித்த" கப்பல் இனம் தெரியாதோரால் தாக்கப்பட்டதாக நேற்று இரவு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

1200முதல் 1700 வரையிலான படையினரை ஏற்றிக் கொண்டு திருகோணமலைத் துறைமுகத்தில் இருந்து காங்கேசன்துறை நோக்கி வந்து கொண்டிருந்த மேற்படிக் கப்பல் இரு மீன் பிடிப் படகில் வந்த இனம் தெரியாதோரால் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுப் பிற்பகல் 5.40 மணிக்கு திருமலையில் இருந்து புறப்பட்ட கப்பல் நேற்றிரவு 7.05மணியளவில காங்கேசன்துறைக்கு வரும் கடற் பாதையில் வைத்துத் தாக்கப்பட்டுள்ளது.

இத்தாககுதலில் 3 படையினரும் 4 மாலுமிகளும் காயடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் அனைவரும் சிகிச்சைக்காக திருகோணமலை கடற்படை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.இவர்களில் ஒரு படைவீரர் ஆபத்தான நிலையில் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


இதேவேளை கடற்படையினர் மேற் கொண்ட பதில் தாக்குதலில் மீன் பிடிப்படகில் ஒன்று கடலில் மூழ்கியதாகவும் மேலதிக சேத விபரங்கள் தெரியவரவில்லை எனவும் படைத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச் சம்பவம் குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு தகவல் கிடைத்ததையடுத்து அவர்கள் சம்பவ இடத்தை நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.எனினும்,அவர்கள் இச்சம்பவம் குறித்து கருத்து எதனையும வெளியிடவில்லை. (இ)

# யாழ்.மாநகர சபைக் காணியில் பாரிய படை முகாம் அமைப்பு

# புலிகள் வன்மையான கண்டனம்

### அமைச்சர் மாரப்பனவுக்கு தமிழ்ச்செல்வன் கடிதம்



(நமது நிருபர்)

**யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான வளாகத்திலும் அதனை அண்டியுள்ள பகுதிகளிலும் பாரிய இராணுவ முகாம் அமைக்கும் பணியில் பெருமளவு இராணுவத்தினர் ஈடுபட்டிருப்பது யாழ்.மண்ணில் பெரும் பதற்ற நிலையை ஏற்படுத்தியிருப்பதுடன் மக்களின் பலமான எதிர்ப்புக்களையும் சம்பாதித்துள்ளது.**

**இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பனவுக்கு அனுப்பி வைத்துள்ள கண்டனக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.**

பல்வேறு பொது அமைப்புக்களின் [illegible]ளின மத்தியில் யாழ். [illegible]பையின் நிலப்பரப்பில் [illegible]ாணுவத்தினரால் புதிதாக பாரிய [illegible]ாணுவ முகாம் அமைக்கப்படுவதைக் கண்டித்து சு.ப.தமிழ்ச்செல்வன் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இக் கடிதத்தின் பிரதிகள் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர்,இலங்கை அரசின் சமாதான செயலகப் பணிப்பாளர்,நோர்வேத் தூதுவர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு அனுப்பி வைத்துள்ள அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

யாழ்ப்பாணம் ஞானம்ஸ்,சுபாஸ் விடுதிகளில் தற்போது நிலை கொண்டுள்ள இராணுவத்தினரை வெளியேற்றுவதற்கு அரசு தீர்மானித்திருப்பதை

(10ம் பக்கம் பார்க்க)

## யார் ஆட்சியில் இருந்தாலும் சமாதான முயற்சி தொடரும்

### ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

யார் ஆட்சியில் இருந்தாலும் தற்போது முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படும்.அதற்கு விடுதலைப் . புலிகள் ஒத்துழைப்புத் தருவார்கள் என்று தான் நம்புவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுத் தூதுவர்கள்,இராஜதந்திரிகள் ஆகியோரைச் சந்தித்துப் பேசிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்வாறு உறுதி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று நடைபெற்ற இச் சந்திப்பின் போது அவர் மேலும் பேசுகையில்;

எவர் எந்தக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்தாலும் அவர்கள் ஆட்சி அமைக்கும்போது இலங்கை மக்களின் அடிப்படை உரிமைகளை மதிக்க வேண்டும்.

(10ம் பக்கம் பார்க்க)

## முகாம் அமைப்பதை எதிர்த்து இன்று அடையாள மறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை வளாகத்தி[illegible]ள் இராணுவத்தினர் புதிய முகாம் அமைப்பதைக் கண்டித்து அதற்கு [illegible]திர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இன்று காலை யாழ்ப்பாணம் வேம்[illegible]டிச் சந்தியில் அடையாள மறியற் [illegible]பாராட்டம் ஒன்று இடம் பெறவுள்[illegible]து.


யாழ்.உயர் தொழில் நுட்ப நிறுவன மாணவர்களுடன் இணைந்து யாழ்.தொழில் நுட்பக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி,யாழ்.மத்திய கல்லூரி மாணவர்கள் ஒரு மணி நேரம் வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இம் மறியல் போராட்டத்தைத் தொடர்ந்து யாழ்.மாவட்ட கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் மகஜர்கள்

(10ம் பக்கம் பார்க்க)

## புலிகள் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் அல்ல

## சர்ச்சைக்கு முற்றுப் புள்ளி வைத்து ஆனந்தசங்கரி எம்.பி. அறிக்கை



(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி நேற்று தனக்கு எதிராக ஏற்பட்டிருக்கும் சர்ச்சை குறித்து விளக்கும் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

"விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் இல்லை" என்று நான் கூறியதாக உருவாகியிருக்கும் சர்ச்சைக்கு இத்துடன் முற்றுப் புள்ளிவைக்குமாறு மிகப் பணிவாக வேண்டுகின்றேன்.யார், யாரோ எல்லாம் அறிக்கை விடுவதும்,சிலர் தம்மை பெரும் உத்தமர்கள் போல் காட்டிக் கொண்டு என்னைப் பற்றி நியாயமற்ற முறையில் பத்திரிகைகளில் விமர்சிப்பதும் வேதனை தருகிறது.

நான் பாராளுமன்ற ஆசனத்தை வெறும் சம்பிரதாயமாகப் பாவிக்க விலலை.விடுதலைப் புலிகளின் தடையை

(10ம் பக்கம் பார்க்க)

## ஆனந்தசங்கரிக்கு எதிராக மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணித் [illegible]லைவரும் யாழ்.மாவட்டப் பாரா[illegible]மன்ற உறுப்பினருமான வீ.ஆனந்த[illegible]ங்கரிக்கு எதிராக நேற்று மட்டக்[illegible]ளப்பில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் [illegible]பற்றது.

கிழக்குப் பல்கலைக் கழக மாண[illegible]வர்களும விரிவுரையாளர்களும் இணை[illegible]து சுமார் ஒரு மணிநேரம் கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் இல்லை என அண்மையில் ஆனந்தசங்கரி கூறியதைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டதாக மாணவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை இப் போராட்டத்தின் போது ஆனந்தசங்கரியின் கொடும்பாவியும் மாணவர்களால் எரிக்கப்பட்டது. (த-5)

# சமாதான பேச்சு முன்னேற்றம் குறித்து பிரி. வெளியுறவு அமைச்சர் பாராட்டு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசிற்கும் இடையே நடை பெற்று வருகின்ற சமாதானப்பேச்சு வார்த்தைகள் முன்னேற்றம் அடைந்து வருவதாக பிரித்தானிய வெளி விவகார மற்றும் பொதுநலவாய விவகாரங்களுக்குப் பொறுப்பானஅமைச் சர் மைக்ஓபிரியான் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசியல் யாப்பு விவகார அமைச்சர் ஜீ.எல் பீரிஸை கடந்த சனிக்கிழமை தமது அலுவலகத்தில சந்தித்தபோதே மைக்ஓபிரியான இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும்கூறுகையில்,இலங் கையில் நடைபெறறு வரும் சமாதான பேச்சு வார்த்தைகளை பிரித்தானிய அரசு மிகவும் உன்னிப்பாக அவதா னித்து வருகிறது.

இப்பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறுவதற்கு எமது பூரண ஆதர வையும் ஒத்துழைப்பையும் வழங்கும் என்றார்.

அதேசமயம்,அமைச்சரவைப் பேச்சா ளரும் அரசியல் யாப்பு விவகார அமைச்சருமான ஜீ.எல் பீரிஸ் பிரித் தானிய வெளிவிவகார அமைச் சருக்கு தற்போது நடை பெற்று வரும் சமாதானபேச்சு வார்த்தை பற்றியும் ஆறாம் சுற்றில் பேசப்பட்ட முக்கிய விடயங்கள்தொடர்பாகவும் விளக்க மளித்தார்.

அமைச்சர் பீரிஸ் ஜப்பானில் 6ஆம் சுற்றுப்பேச்சை முடித்துக் கொண்டு நேரடியாகஅமெரிக்கா சென்றதும் அவ்விஜயத்தை முடித்துக் கொண்டு பிரித்தானியாவுக்கு சென்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-10)

## ஓரிரவில்6கடைகளில் கொள்ளை

(அம்பாறை)

அம்பாறை பிரதான வீதியில் உள்ள 6 கடைகள் இனம் தெரியாத நபர்களினால் நேறறுமுந்தினம் இரவு கொள்ளையிடப்பட்டுள்ளன.

கொள்ளையர்கள் 6கடைகளை யும் உடைத்து பல இலட்சம் ரூபா பெறு மதியான பணத்தையும் பெருமளவு பொருட்களையும் கொள்ளையிட்டுச சென்றுள்ளனர். (உ-8)

# இலங்கைத் தேயிலைக்கு ஜப்பானிய விருது

(கொழும்பு)

இலங்கையின் பிரபல தேயிலை ரகம் ஒன்றிற்கு அண்மையில் ஜப் பானிய விருது கிடைத்துள்ளது.

ஜப்பானிய இலங்கைக்கான தொழில் நுட்பக் கலாசாரச் சங்கத் தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள 7 ஆவது ரைக்கி ஜக்கிமோட்டோ ஐந்து எஸ். விருது வழங்கும் வைப வத்திலேயே இலங்கைத் தேயிலை ரகம் ஒன்றிற்கு விருது கிடைத் துள்ளது.

உள்ளூரிலும் வெளியூரிலும் இந்த ரகத் தேயிலையே அதிகமாக விற்பனையாகின்றது.

அட்டனைச் சேர்ந்த தோட்டம் ஒன்று தோட்டத் தொழில்துறையில் ஜப்பானிய தொழில் ஸ்தாபனத்தின் இலட் சியத்தை அமுல் செய்வதற்கான இரண்டாவது சிறப்பு இடத்தைப் பெற்றுள்ளது. வினிபத்தேன தோட்ட மொன்றும் டிக்கோயா தோட்டம் ஒன்றும் தனித்தனியான சிறப்பு விருதுகளைப் பெற்றுள்ளதுடன் விம்புல தோட்டம் பாராட்டைப் பெற் றுள்ளது.

இதேவேளை, ஜப்பானின் எஸ் விருது வழங்கும் முறையானது இலங்கை தேயிலையின் தரத்தை மேலும் உயர்த்துவதுடன் தேயிலை உற்பத்தியையும் ஏற்றுமதி வரு மானத்தையும் அதிகரிக்கச் செய்துள் ளதாக வட்டவளை தோட்டத்தின் பிரதம நிறைவேற்று உத்தியோகத் தர் விசுகோவிந்தசாமி தெரிவித் துள்ளார். (பி-10)

# புனரமைக்கப்படவேண்டிய பகுதியில் படைமுகாம் அமைப்பது ஒப்பந்த முரண்

### புதிய ஜனநாயகக் கட்சி கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரின் மத்தியில் புதிய இராணுவ முகாமை அமைக்கும் முயற்சி மக்களின் இயல்பு வாழ்க் கைக்கு இடையூறான ஒன்றாகவே அமைகின்றது.

இவ்வாறு புதிய ஜனநாயகக் கட்சி விடுத்துள்ளசெய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

போரினால் யாழ்.நகரம் சிதைவ டைவதற்குமுன்னர், பெருமளவு மக் களின் நடமாட்டம் மிகுந்த பகுதியாக வும் பொழுது போக்குக்குரிய இடமாக வும்யாழ்.மாநகரசபை வளாகமும் அதனை அண்டிய பிரதேசங்களும் இருந்துவந்தன.

அத்துடன், இப்பகுதியோடு இணைந்த கடற் பிரதேசமும் மீனவர்களின் தொழிலுக்கு உகந்த இடமாக இருந்து வந்தது.யுத்தத்தினால் அழிக்கப் பட்ட இத்தகைய பகுதிகள் மக்க ளின் இயல்பு வாழ்க்கையை மீளமைப் பதற்காக புனரமைக்கவேண்டிய இக்கட்டத்தில்,இராணுவமுகாமை அமைக்க முயல்வது புரிந்துணர் வுக்கும் சமாதான முயற்சிக்கும் இடையூ றாக அமையும்.

இதனால், இராணுவமுகாம்அமைக் கும் முயற்சியை கைவிடுமாறும் கோருகின்றோம்.

இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# தந்தை செல்வாவின் வழி நின்று உருவாக்கப்பட்டதே கூட்டமைப்பு

### இதில் பிளவு ஏற்படுவது மக்கள் மத்தியில் குழப்பத்தை உண்டு பண்ணும் மாவை எம்.பி

(யாழ்ப்பாணம்)

ஒரே இலக்கை அடிப்படையாகக் கொண்டு ஒரு தலைமைத்துவத்தின் கழ் செயற்பட வேண்டியவர்களாகிய நாம்,வெவ்வேறு தீர்மானங்களுடன் பிளவுபட்டு நிற்பது மக்கள் மத்தி யில் குழப்பத்தை உண்டு பண்ணும்.

எம் மீது நம்பிக்கை வைத்து வாக்குப் போட்ட மக்களை ஏமாற்றுவதாக வும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை குழப் பியடிப்பதாகவும் கூட இது அமைய லாம்.

தந்தை செல்வாவின் 105வது பிறந்த நாள் நிகழ்வு நேற்று யாழ். தந்தை செல்வா நினைவுச் சதுக்கத் தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய யாழ்.மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர் மாவை சேனாதிராஜா தனது உரை யில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரை யாற்றுகையில்,

தந்தை செல்வா எக்காலத்திலும் தமிழர்களின் ஒற்றுமைப்பாட்டையே வலியுறுத்தி வந்தார்.

தமிழ்க்காங்கிரஸும்,தமிழர் விடு தலைக் கூட்டணியும் இணைந்து செயற்பட வழிவகுத்த உத்தமர் அவர்.

அவரின் வழியைப் பின்பற்றியே தமிழர் விடுதலைகூட்டணி, ரெலோ, ஈ.பி. ஆர்.எல்.எவ். ,அகில இலங்கைத தமிழ்க்காங்கிரஸ் என்பன இணைந்து கூட்டமைப்பை உருவாக்கிச் செயற் பட்டோம்.

தமிழர்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படுவதனால் புலிகளுடன் மட்டுமே பேச வேண்டும். அதுவும் சர்வதேசத்தின் மத்தியஸ்தத்துடன் இடம் பெறவேண்டும் என்று பல தடவைகள் நாம்பிரதமரைவலியுறுத்தி னோம்.

இதன் பலாபலனே தற்போது இடம பெற்றுவரும் சமாதானப் பேச்சு வார்த்தை,

தேர்தலில் வெல்லும் நோக்குடன் கூட்டமைப்பு உருவாக்கப்படவில்லை எமது மக்களின் உரிமைகளுக்காக உரத்துக்குரல் கொடுக்க பலம் அவசி யம் தேவைப்பட்டது. அதற்காகவே ஒன்றிணைந்தோம்.

தற்போது நகர மத்தியில் அமைக் கப்பட்டு வரும் முகாம்விடயத்திலும் அதனைத் தடுத்து நிறுத்தவும் உரத் துக்குரல் கொடுக்க நாம் தயங்க மாட்டோம்.

இது விடயமாக நாம் விரைவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுக்களில் ஈடுபடவுள்ளோம்.

இச் சந்திப்பின் போது எம்மால் முன்வைக்கப்படும் கோரிக்கைகளுக் குத் தகுந்த பதில் தரத் தவறுமிடத்து பாரிய விளைவுகளை அரசு எதிர் நோக்க வேண்டிவரும்.

அகிம்சைப் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழர், ஆயுத வழிமுறையை நாடிய முன்னைய வரலாற்றை இந்த அரசாங் கம் மறந்துவிடாது என நாம் நம்புகின் றோம் என்றார்.

தந்தை செல்வாவின் நினைவுதின நிகழ்வில் அருள் திரு ஆம்ஸ்ரோங் அடிகள்,சி.வி.கே. சிவஞானம், ஈழவேந்தன்,முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்எம்.பி. சிவமகாராஜா, போரசிரியர் சிற்றம்பலம், நல்லூர்க் கோட்டஅரசியல் துறைப்பொறுப்பாளர் ஈஸ்வரன் மற்றும்பெருமளவு பொது மக்கள் கலந்து கொண்டனர். (உ-4)

# குற்றப் பணம்

(சுதுமலை)

காலவதியான மருந்துப் பெட்டி கள் மற்றும் பிஷ்கட் வகைகளை விற்பனை செய்த இரண்டு மருந்து விற்பனை நிலைய உரிமையாளர் களுக்கு மல்லாகம் மாவட்ட நீதி மன்றம் தலா 5 ஆயிரம் ரூபா குற் றப் பணம் செலுத்துமாறு தீர்ப்பு வழங்கியுள்ளது.

கடந்த மாத இறுதிப் பகுதியில் வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரி வில் உள்ள மேற்படி இரு மருந்துக் கடைகளையும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அடங்கிய குழு வொன்று சோதனையிட்ட சமயமே இவ்வாறு காலவதியான பொருட் கள் விற்பனை செய்யபட்டமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.(உ-252)

# சிம்பாப்வே அணியின் முன்னாள் தலைவர்ஓய்வு

(ஹராரே)

சிம்பாப்வே அணியின் முன்னாள் அணித் தலைவர் அலிஸ்ரர் கம்பெல ஒரு நாள் சர்வதேச மற்றும் ரெஸ்ற் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிவித் துள்ளார்.

ஷார்ஜா போட்டிகளில் பங்கு பற்றும் சிம்பாப்வே அணியில் 30 வயதாகும் கம்பெல் இடம்பெற வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னர் இடம் பெற்ற உலகக் கிண்ணப்போட்டிகளிற்கான பெயர் படடியலிலும்இவர் இடம் பெறவில்லை. ஆயினும்மார்க் வெமியூலன் தலை யில் காயமடைந்ததால் கென் யாவுக்கு எதிரான சுப்பர்சிக்ஸ் போட்டிக்கு கம்பெல் அவசரமாக அழைக்கப் பட்டார்.

இந் நிலையில் மே மாதம் நடை பெறவுள்ள இங்கிலாந்து சுற்றுப் பயணத் துக்கான பட்டியலிலும் தேர்வாளர் கள் என்னைத் தேர்வு செய்யமாட் டார்கள் எனும் எண்ணத்தை எனக்கு உண்டு பண்ணியதால் ஓய்வு பெற்று விடுவது என்ற முடிவை எடுக்க நேர்ந்தது என கம்பெல் செய்தியாளர் களிடம் தெரிவித்துள்ளார்.

இதுவரை 60 ரெஸ்ற் போட்டி களில் பங்கு பற்றி மொத்தமாக 2ஆயிரத்து 858 ஓட்டங்களையும் (சராசரி 27.21),188 ஒரு நாள் சர்வதேச போட்டிகளில் விளையாடி மொத்த மாக 5ஆயிரத்து 185 ஓட்டங்களை யும்(சராசரி 30.50)இவர்பெற்றுள்ளார். இவரது ஓய்வு சிம்பாப்வே அணிக்கு ஈடுசெய்யமுடியாத இழப்பாகஇருக்கும் எனக் கருதபபடுகிறது. (உ-55)

# உலகக் கிண்ணத்துக்காக உபாதையைத் தாங்கிய இந்திய வீரர்அஸிஷ் நெஹ்ரா

(கொல்கத்தா)

கணுக்காலில் ஏற்பட்டுள்ள காயத்துக்கு சிகிச்சைமேற்கொள்ள வேண்டியுள்ளதால் இந்தியாவின் இடது கை வேகப்பந்து வீச்சாளர் அஸிஷ்நெஹ்ரா 6மாத காலத்துக்கு போட்டிகளில் பங்கேற்கமாட்டார் என தெரியவருகிறது.

முண்ணி வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சிகிச்சை அளித்த டாக்டர் சீஸ் பெனரரரா எதிர் வரும் 17ஆம் திகதி தென்னாபிரிக்காவில் உள்ள பிரிட் டோரியாவில் இவருக்கு அறுவைச்சி கிச்சை மேற்கொள்ளவுள்ளார்.

நமபிய அணியுடன் பீட்டர் மாரிட்ஸ பேர்க்கில் பெப்ரவரி 23ஆம் திகதி நடை பெற்ற உலகக் கிண்ண ஆட்டத்தின் போதுநெஹ்ராவின் வலது கணுக் காலில் காயம் ஏற்பட்டது.அப்போதே அவருக்கு வலி அதிகமாக இருந்த போதிலும் மற்றைய ஆட்டங்களை கருததில் கொண்டு விளையாடினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உலகக்கிண்ணச் சுற்றுப்போட்டியில் இஙகிலாந்திற்கு எதிரான ஆட்டத்தில் நெஹ்ரா 6இலக்குகளை சாய்த்து அனைவரது கவனத்தையும் ஈர்த் தமை குறிப்பிடத்தக்கது. (உ-55)


# எக்ஸ்போ ஏவியேஷன்

இல.464, காலி வீதி,
கொழும்பு-3
தொ.பே: 074 512666
தொ.ந: 074 514700

இல.1E, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 3891, 071 34 8888, 071 34 9999
தொ.ந: 021 222 3891

இல.296 A/1 காலி வீதி,
கொழும்பு-6.
தொ.பே: 01 360290, 01 360291

பயணிகளின் நலன் கருதி எதிர்வரும் ஏப்ரில் மாதம் 1ம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் புதிய நேர அட்டவணை பின்வருமாறு:

**காலை நேர விமானசேவை - EXV 712**

| விபரணம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| புறப்படல் இரத்மலானை | 06.30 | 06.30 | 06.30 | ஓய்வு | 10.45 | 08.15 | - |
| வருகை பலாலி | 07.30 | 07.30 | 07.30 | | 11.45 | 09.15 | - |
| புறப்படல் பலாலி | 08.15 | 08.15 | 08.15 | | 12.30 | 10.00 | - |
| சென்றடைதல் இரத்மலானை | 09.15 | 09.15 | 09.15 | | 13.30 | 11.00 | - |

**மாலை நேர விமானசேவை - EXV 714**

| விபரணம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| புறப்படல் இரத்மலானை | - | 12.45 | - | ஓய்வு | 16.00 | 16.00 | 14.00 |
| வருகை பலாலி | - | 13.45 | - | | 17.00 | 17.00 | 15.00 |
| புறப்படல் பலாலி | - | 14.30 | - | | 17.45 | 17.45 | 15.45 |
| சென்றடைதல் இரத்மலானை | - | 15.30 | - | | 18.45 | 18.45 | 16.45 |

*இலவச போக்குவரத்து
யாழ்-பலாலி-யாழ்
கொட்டாஞ்சேனை- இரத்மலானை- கொட்டாஞ்சேனை
*வெளிநாட்டுப் பிரஜைகளுக்கும், உள்நாட்டுப் பிரஜைகளுக்கும் ஒரே விதமான பயணக்கட்டணங்களே அறவிடப்படுகின்றது. ஒரு வழி - 2425/=, இருவழி - 4550/=

குறிப்பு:- மேற்கூறப்பட்ட புதிய நேர அட்டவணைக்கேற்ப பயணிகள் தங்கள் பதிவுகளை மீளுறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (C/5886)

# கப்பல் தாக்கப்பட்டமை குறித்து

# சீன அதிகாரிகள் பலத்த ஆட்சேபம்

## பேணாட் குணதிலகவிடம் வெளிப்படுத்தினர்

(பீஜிங்)

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் சீன மீன்பிடிக்கப்பல் தாக்கப்பட்ட போது காணாமல் போன மற்றும் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டுமென சீன அரசு இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

ஜப்பானில் நடந்த 6 ஆம் சுற்றுப் பேச்சுக்களில் கலந்து கொண்ட பின்னர் சமாதானச் செயலகப் பணிப்பாளரும் சீனாவுக்கான இலங்கைத் தூதுவருமான பேணாட் குணதிலக இலங்கை திரும்புவதற்கு முன் சீனாவுக்கு பயணமொன்றை மேற்கொண்டிருந்தார்.

அங்கு சென்ற அவர் சீன அதிகாரிகளைச் சந்தித்து இந்தச் சம்பவம் குறித்து விரிவாகக் கலந்துரையாடிய போதே அவர்கள் மேற் கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இச்சந்திப்பின் பொழுது அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் சமாதான நடவடிக்கைகளைப் பாதிக்கும் வகையில் சீனா எந்தவித செயற்பாடுகளிலும் ஈடுபடாது என சீன அதிகாரிகள் உறுதி அளித்தனர்.

இதேவேளை, இச்சம்பவம் தொடர்பாக சீன அதிகாரிகள் கடுமையான ஆட்சேபத்தைப் பேணாட் குணதிலகவிடம் தெரிவித்துள்ளனர். (உ-5)

# பனைவள ஆராட்சியாளரை இன்று பாராட்டிக் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

பனைவள ஆராட்சியாளரும் ஸ்ரீஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழக உயிரியல் இரசாயனப் பிரிவுத்தலைவருமான பேராசிரியர் ஈ.ஆர்.ஜான்ஸ் யாழ்.பனை அபிவிருத்திச் சபையால் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளார்.

இந்நிகழ்வு இன்று பி.ப 3 மணிக்கு பனை அபிவிருத்திச் சபையின் யாழ். தலைமைக் காரியாலயத்தில் சபையின் தலைவர் பெர்.சிவபாதம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழத்தின் பனைவளம்சார் ஆராட்சிக்குழுவும் பங்கேற்று பயன்மிகு கருத்துக்களை முன்வைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

### நிரந்தர நியமனம் கோரி

# சுகாதாரத் தொண்டர்கள் நாளை மறியல் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சுகாதாரத் தொண்டர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி யாழ்.மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் பணிமனை முன்பாக நாளை மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

காலை 7 மணி முதல் இடம்பெறவுள்ள இம் மறியல் போராட்டத்தில் தீவகம், யாழ்ப்பாணம், கோப்பாய், மானிப்பாய், தெல்லிப்பழை, வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிச் சுகாதாரத் தொண்டர்கள் ஈடுபடவுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான சுகாதாரத் தொண்டர்கள் எந்த வேதனமும் இன்றி சேவையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (உ)

### லஞ்ச ஊழல் விசாரணைகளுக்கு

# ஆணைக்குழுவிலுள்ளவர்களே தடையாகவுள்ளனராம்

(கொழும்பு)

லஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப் பெறும் லஞ்ச ஊழல் தொடர்பான புதிய முறைப்பாடுகளைப் பற்றி விசாரணை செய்வதற்கு அந்த ஆணைக்குழுவில் உள்ள உத்தியோகத்தர்கள் அனுமதி வழங்கத் தடையாக இருக்கிறார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

ஆணைக்குழுவில் உள்ள ஆணையாளர் பதவி வெற்றிடமாக இருப்பதால் ஏனைய அதிகாரிகள் இவ்வாறு நடந்து கொள்கிறார்கள் எனவும் கூறப்படுகிறது.

எனினும் முன்னரே கிடைக்கப் பெற்ற லஞ்ச ஊழல் தொடர்பான முறைப்பாடுகள் குறித்து தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

அத்துடன், திடீர் தேடுதல்களுக்கு அங்கீகாரம் வழங்கப்படுவது இல்லை எனவும் லஞ்ச ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதேவேளை,பெப்ரவரி மாதம் மட்டும் ஒரே ஒரு தடவை திடீர் தேடுதல் நடத்தப்பட்டது எனவும அதன் பின்னர் இத்தகைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் லஞ்ச ஊழல் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. (பி-10)

# ஓ.எல் பரீட்சைப் பெறுபேறு இவ்வாரம் வெளியாகும்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த(சா/த) பரீட்சைப் பெறுபேறுகள் இவ்வார இறுதியில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பரீட்சைத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் மகிந்த விஜயஸ்ரீ தெரிவித்துள்ளார்.

இப் பரீட்சைக்குத் தோற்றிய 3 இலட்சத்துக்கு மேற்பட்ட பாடசாலைப் பரீட்சார்த்திகளின் கணிப்பீடுகளையும் இப் பரீட்சைப் பெறுபேறுகளில் உள்ளடக்க வேண்டியிருப்பதால் இம்முறை பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். (உ-8)

### வன்னிப்பிராந்திய டீ.ஏ.எம்

# பட்டதாரிகள் அமைப்பு பிரதமருக்கு மகஜர்

(தனங்கிளப்பு)

இலங்கையில் 1925ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு மருத்துவத்துறையின் வளர்ச்சிக்காக வருடா வருடம் டீ.ஏ.எம் சுதேச மருத்துவப் பட்டதாரிகளை உருவாக்கி வரும் யாழ்.லங்கா சித்த ஆயுர்வேதக் கல்லூரியில் இருந்து வெளியாகும் டீ.ஏ.எம் பட்டதாரிகளுக்கு சுதேச மருத்துவத்துறை வெற்றிடங்களில் வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு வன்னிப் பிராந்திய டீ.ஏ.எம் பட்டதாரிகள் அமைப்பின் சார்பில் டாக்டர் கே.வி.கே.திருலோகமூர்த்தி அனுப்பி வைத்துள்ளார்.

அம் மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டதாவது,

யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி இலங்கை அரசால் வர்த்தமானி பிரசுரத்தின் பிரகாரம் அங்கீகரித்த கல்லூரியாகவே இருந்தது.

இக்கல்லூரிக்கு சுதேசசுகாதார அமைச்சும் வடகிழக்கு மாகாண சுகாதார சுதேச வைத்திய அமைச்சும் ஆயுர்வேத திணைக்களமும் ஆக்க பூர்வமான உதவிகளை நல்கி வருகின்றன.

இக்கல்லூரியின் இறுதி ஆண்டுப் பரீட்சைகளையும் ஆயுர்வேத திணைக்களமே நடத்தி வருகிறது. இக்கல்லூரியின் பட்டதாரிகளே பல பாகங்களிலும் மக்களுக்கு மருத்துவ சேவையை வழங்கி வருகின்றனர்.

இந்த நிலையில் உள்ளூராட்சித் திணைக்கள வைத்திய சாலைகளில் கடமையாற்றும் இவ் டீ.ஏ.எம் பட்டதாரிகளின் வேலை உறுதிப்படுத்தப்பட வேண்டும். புதிய வேலை வாய்ப்புக்களையும் இப் பட்டதாரிகளுக்கு வழங்க வேண்டும். இவ்வாறு அம்மகஜரில் கோரப்பட்டுள்ளது. (உ-37)

# ஆட்டோ அன்பளிப்பு

(கொழும்புத்துறை)

யாழ்.மாநகரசபை, சைவசமய விவகாரக் குழுவிற்கு இந்து விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் அண்மையில் ஆட்டோ ஒன்றினை அன்பளிப்புச் செய்துள்ளார்.(உ-51)

# வன்னியில் திறம்பட இயங்கும் வெண்புறா நிறுவனப் பணிகள் யாழுக்கு விரிவு படுத்தப்படுகின்றன

(ஈச்சமோட்டை)

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில் நுட்ப நிறுவனமும் யுனிசெவ் நிறுவனமும் இணைந்து யாழ்ப்பாணத்தில் ஏப்ரல் மாதம் முதல் மிதிவெடி விழிப்புணர்வுத் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக யாழ்.வெண்புறா செயற்கை உறுப்பு தொழில் நுட்ப நிறுவன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத்திட்டத்திற்கான ஆளணியை அண்மையில் நடைபெற்ற நேர்முகத் தேர்வின் மூலம் தாம் தெரிவு செய்துள்ளதாகவும் இதில் திட்ட இணைப்பாளர் பதவிக்கு ஒருவரும், நிர்வாக உத்தியோகத்தர் ஒருவரும் ,வெளிக்கள உத்தியோகத்தர்கள் எட்டுப் பேருமாக பத்துப் பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இத்திட்டத்தின் அடிப்படையில் வீடுகளுக்கு விஜயம் செய்தும் சன சமூக நிலையங்கள், பாடசாலைகள் என்பனவற்றில் பொதுமக்களைத் திரட்டியும் விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

இதைவிட மிதிவெடியால் பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்காக தமிழர் புனர்வாழ்வுக்கழகத்துடன் இணைந்து செயற்கை உறுப்பு தயாரித்தல் சம்பந்தமாகவும் ஆராயப்படுகிறது.

வெண்புறா நிறுவனம் வன்னிப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடி, மிதிவெடிகளை அகற்றி வருவதோடு உரிய அமைதி கிடைக்குமிடத்து யாழ்ப்பாணத்திலும் தமது பணியாளர்கள் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட விருப்பம் கொள்ளவுள்ளனர் எனவும் தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-59)

### தரம் 09 மாணவர்களுக்கான

# கட்டுரைப் போட்டி

பாடசாலை மாணவர்களுக்காக மாதமொரு கட்டுரைப்போட்டி

பரிசில்கள்

1ஆம் பரிசு ரூபா 750
2ஆம் பரிசு ரூபா 500
3ஆம் பரிசு ரூபா 250

மற்றும் தகுதியான கட்டுரைகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

அனுசரணை:
*நீர்வேலி பிரம்மஸ்ரீ கு.தியாகராசசர்மா

## போட்டியின் விதிகள்

**தரம் ஒன்பதில்** இப்பொழுது கற்கும் மாணவர்கள் மட்டும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

* **கட்டுரையின் தலைப்பு :** ''தாய் அன்பிற்கு நிகரேது''
கட்டுரை 175தொடக்கம் 200 சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.
* புஸ்காப் தாளில் ஒவ்வொரு தனிப் பக்கத்தில் எழுதப்படல் வேண்டும்.
* கட்டுரைகள் 25.05.2003 ற்கு முன்னதாக ''மாணவர் கட்டுரைப் போட்டி'' வலம்புரி, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

### இணைக்கும் பத்திரம்

### கட்டுரைப் போட்டி இல-3

மாணவர் முழுப் பெயர் :------------------------
பாடசாலை :------------------------
:------------------------
கற்கும் தரம் :------------

உறுதிப்படுத்துகிறேன்

------------------
ஆசிரியர்

# தந்தைக்கு அஞ்சலி

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் தந்தை செல்வாவின் பிறந்த தினமும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கதிரவேற்பிள்ளை நினைவு தினமும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்பு தலைமை அலுவலகத்தில் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில், தலைவர்களின் உருவப்படங்களுக்கு மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் என். இரவிராஜ், திருகோணமலை மாவட்ட மத்திய செயற்குழு உறுப்பினர் சச்சிதானந்தவேல், முன்னாள் யாழ். மாநகரசபை உறுப்பினர்களான அரவிந்தன், தங்க. முகுந்தன் ஆகியோரும் மறைந்த தலைவர்களின் பணிகள் குறித்து தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். (உ)





நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தமிழீழ விடுதலைப்புலிகளின் நல்லூர் கோட்டப் பொறுப்பாளர் ஈஸ்வரன் ஆகியோர் தந்தை செல்வாவின் சிலைக்கு மலர்மாலை அணிவிப்பதையும், தந்தையின் நினைவுக் கல்லறைக்கு முக்கிய பிரமுகர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்துவதையும் படங்களில் காணலாம்.

படங்கள் க. பவன்.

# பஸ்ரா நகருக்கருகிலுள்ள கேந்திர நகரம் பிரிட்டிஷ் படைகளிடம் வீழ்ந்தது

## 205 ஈராக்கியரை யு.எஸ் படைகள் பிடித்தன

(குவைத்)

**ஈராக்கின் தென்பகுதியிலுள்ள பஸ்ரா நகருக்கருகில் அபுல் அல்கதீப் என்ற கேந்திர நகரை பிரிட்டிஷ் படைகள் ஈராக்கியரின் கடும் எதிர்த்தாக்குதலை முறியடித்து கைப்பற்றியுள்ளனர்.**

**இதேசமயம் அமெரிக்க மெரைன் படையினர் ஈராக்கிய அதிரடிப்படைப் பிரிவொன்றின் 200 வீரர்களையும் 5 அதிகாரிகளையும் சிறைப்பிடித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

**அமெரிக்க பாதுகாப்புஅமைச்சர் பத்திரிகை நிருபர்களிடம் வாஷிங்டனில் பேசிய போது ஈராக்கை நாம் விடுவிப்போம். இன்னும் சில தினங்களில் பக்தாத் சுற்றி வளைக்கப்பட்டுவிடும் என்று கூறினார்.**

ஈராக்கிய போரில் ஒரு முக்கிய திருப்பமாக ஈராக்கின் தென்பகுதியிலுள்ள பஸ்ரா நகருக்கருகில் கேந்திர நிலையமான அபுல் அல்கதீப் நகரம் தங்களிடம் வீழ்ச்சியுற்றிருப்பதாக பிரிட்டிஷ் இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

ஈராக்கின் தலைநகர் பக்தாத்தின் மத்திய பகுதியில் நேற்று அதிகாலை மிக மோசமான இரண்டு குண்டு வெடிப்புத் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.

### மாளிகை தகர்ப்பு

இத்தாக்குதலின் போது அதிபர் சதாம் ஹுசைனின் மகன் பயன்படுத்தும் அதிபர் மாளிகை பலத்த சேதமடைந்துள்ளதாகவும் வடக்கு ஈராக்கிலுள்ள அல் கெய்டா இயக்கத்துடன் தொடர்புடைய பயங்கரவாதிகளின் முகாம் ஒன்றும் கடுமையான தாக்குதல்களிற்கு உள்ளாகியிருக்கின்றது என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கடந்த சில தினங்களாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அமெரிக்க தரைப்படைத்தாக்குதல் நடவடிக்கை மேலும் 35 முதல் 40 நாட்களுக்கு நீடிக்கப்படும் என்று மத்திய ஈராக்கில் இருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

பக்தாத் நோக்கி முன்னேறும் படைகளின் நடவடிக்கை தடைப்பட்டுள்ளதாகவும், ஈராக்கியரின் கடும் எதிர்ப்புக்களே இதற்குக் காரணம் என்று அமெரிக்கத் துருப்புக்கள் கூறுகின்றனர்.

### விடுதலை வீரர்கள்

ஈராக்கிற்குள் ஊடுருவியுள்ள அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் படையினருக்கு எதிராகப் போர் தொடுப்பது ஈராக்கிற்கு சாதகமான சூழ்நிலை நிலவுவதாகவும் தற்கொலைப் போராளிகளைப் பயன்படுத்த ஈராக் எடுத்துள்ள தீர்மானம் தைரியம் மிக்க செயலெனவும் ஈராக் உதவிப் பிரதமர் தாரிக் அஸீஸ் தெரிவித்துள்ளார்.

நாட்டிற்குள் ஊடுருவும் எதிரிப் படையை எதிர்த்துப் போராடுவதற்கு என்ன விலை கொடுத்தேனும் ஈராக் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு பயங்கரவாத முத்திரை குத்தமுடியாது. இவ்வாறான தற்கொலைத் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் விடுதலை வீரர்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கப் படை வீரர்கள் நால்வரை ஈராக்கிய இராணுவ அதிகாரியொருவர் தற்கொலைத் தாக்குதல்கள் மூலம் கொன்றதையடுத்து, தொலைக்காட்சி ஒன்றுக்களித்த பேட்டியொன்றிலே உதவிப் பிரதமர் தாரிக் அஸீஸ் இவ்வாறு கூறியுள்ளார்.

ஈராக்கிற்கு வெளியே இருந்தும் சரி உள்ளே இருந்தும் சரி இத்தகைய போராட்டம் நடத்துபவர்கள் விடுதலை வீரர்கள் என்றும் குறிப்பிட்டார். ஊடுருவல்காரர்கள், பலவந்த குடியேற்றக்காரர்கள், ஏகாதிபத்தியவாதிகள் ஆகியோருக்கு எதிரான விடுதலை வீரர்கள் இவர்கள் என தாரிக் அஸீஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

எதிரிப்படைகளை நிலை குலையச் செய்வதில் ஈராக்கிய மக்கள் துணிச்சலுடனும் அர்ப்பணிப்புடனும் போராடுவதையிட்டு அவர்கள் ஆச்சரியப்படலாம்.

எனினும் தாங்கள் ஆச்சரியப்படவில்லை என்று கூறிய அவர், மேற்குறிப்பிட்டது போல் ஈராக்கியர்கள் தொடர்ந்தும் செயற்படுகிறார்கள் என்று கூறியுள்ளார். (பி-2)

# லக்சர் ஈ தைபா தீவிரவாதிகள் மூவர் கொல்லப்பட்டுள்ளனர்

(புதுடில்லி)

பாகிஸ்தானில் நிலை கொண்டுள்ள லக்ஸர் ஈ தைபா என்ற இஸ்லாமிய தீவரவாத இயக்கத்தை சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படும் மூவரை இந்தியாவின் பம்பாய் நகரின் சுற்றுப்புறத்தில் வைத்து பொலிஸார் நேற்று முன தினம் சுட்டுக் கொன்றுள்ளனர்.

சனசந்தடி மிக்க நெடுஞ்சாலையில் இடம்பெற்ற மோதலின் போதே இவர்கள் மூவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சம்பந்தப்பட்ட மூவரும் முதலில் பொலிஸாரை நோக்கிச் சுட்டதாகவும் இதனை எதிர்த்து பொலிஸார் திருப்பி நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தின் போது இச்சந்தேகத் தீவிரவாதிகள் மூவரும் கொல்லப்பட்டுள்ளனர். (பி-2)

### வைகோ கைது தொடர்பாக

# மத்திய அரசு உச்ச நீதிமன்றில் புதிய மனு தாக்கல்

(புதுடில்லி)

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வைகோ பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டது தொடர்பான வழக்கில் புதிய மனு ஒன்றினை மத்திய அரசு நேற்று உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது.

ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவில் சில தவறுகள் நிகழ்ந்து விட்டதாக மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் ஷொலிக் ஷொரப்ஜி தெரிவித்தார்.

பொடா சட்டத்தின் கீழ் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் திரு வைகோ கைது செய்யப்பட்டது தவறானது என்று பாரதிய ஜனதா கட்சித் தலைவர் திரு வெங்கைய நாயுடு தெரிவித்தார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் நடைபெற்ற தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஆலோசனைக் குழுக் கூட்டத்திற்குப் பின்னர் அவர் செய்தியாளர்கள் மத்தியில் பேசியபோது, இது தொடர்பான வழக்கில் மத்திய அரசின் நிலைப்பாடு குறித்து நேற்று உச்ச நீதிமன்றத்தில் புதிய மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் திரு. வைகோ பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டது சரியானது தான் என்று கூறி ஏற்கனவே மத்திய அரசு தாக்கல் செய்திருந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது தவறு என்றும் அந்த மனுவில் சில தவறுகள் நிகழ்ந்து விட்டது என்றும் குறிப்பிட்டார்.

நேற்றுத் தாக்கல் செய்யப்பட்ட புதிய மனுவில் இத்தவறுகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இதனிடையே மத்திய அரசு தாக்கல் செய்த மனுவில்தவறுகள்இடம்பெற்றதற்கு இளைய வழக்கறிஞர்களே காரணம் என்று மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் திரு. ஷொலிஷொராப்ஜி கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் புது டில்லியில் நடைபெற்ற தேசிய ஜனநாயக கூட்டணியின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் திரு. வைகோ பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டது சரிதான் என்று மத்திய அரசு தாக்கல் செய்திருந்த மனு குறித்த பிரச்சினையை தி.மு.க. மத்திய அமைச்சர் திரு. ரி.ஆர் பாலு எழுப்பியிருந்தார்.

இதற்கு சட்ட அமைச்சர் அருண்யேத்தி மத்திய அரசின் சரியான நிலைப்பாடு அந்த மனுவில் உரிய முறையில் தெரிவிக்கப்படவில்லை எனவும் அதில் சில தவறுகள் இடம்பெற்றுள்ளதாகவும் அதனைத் திருத்திக் கொள்ளும் வகையிலேயே இப்புதிய மனு தாக்கல்செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (பி-2)

# ஏப். 15 இற்குப் பின்னரே பக்தாத் மீது தரைப்படை தாக்குதல் நடக்கும்

(லண்டன்)

ஏப்ரல் 15 ஆம் திகதிக்குப் பிறகு தான் பக்தாத் மீதான யு.எஸ். பிரிட்டிஷ் கூட்டுப்படைகளின் தரைப்படை தாக்குதல் தொடங்கும் என்று போர் குறித்து ஆய்வு செய்துவரும் பிரிட்டன் நிபுணர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

பக்தாத் நகரை நோக்கி முன்னேறி வரும் யு.எஸ்.பிரிட்டிஷ் படைகளின் வேகம் தற்போது குறைக்கப்பட்டுள்ளது. பக்தாத் நகரம் மீது முழு வீச்சில் தாக்குதல் நடத்துவதற்கு மேலும் ஒரு லட்சம் துருப்புக்கள் தேவை. அவற்றை ஈராக்கில் தரையிறக்கியபிறகே பக்தாத் நகரை நோக்கி கூட்டுப்படைகள் வேகமாக முன்னேறிச் சென்று தாக்குதலைத் தொடுக்கும் என்று லண்டனில் உள்ள கிங்ஸ் கல்லூரிப் பேராசிரியர் சர் டிமோதி கார்டன் கூறினார்.

எதிர்பார்த்த அளவுக்கு தரைப் படையினர் அதிக அளவில் அனுப்பப் படாததால் ஈராக்கிற்குள் தற்போதுள்ள படைவீரர்களுக்குத் தேவையான பொருள்கள் கிடைப்பதில் பிரச்சினை ஏற்பட்டு வருகின்றது எனவும் அவர் கூறினார். (பி)

# யு.எஸ்.போர் உத்தி தவறு: முன்னாள் பிரி.அமைச்சர்

(லண்டன்)

அமெரிக்காவின் போர் உத்தி தவறு என்பதையே இப்போதைய நிலைமை காட்டுகின்றது என்று பிரிட்டனின் முன்னாள் வெளியுறவுத் துறைச் செயலர் ராபர்ட் குக் புகார் கூறியுள்ளார்.

ஈராக் போருக்கு பிரிட்டிஷ் அரசு ஆதரவு அளித்ததற்கு ஆட்சேபம் தெரிவித்து பதவியை ராஜினாமாச் செய்தவர் குக்.

சண்டே மிரர் பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டி வருமாறு;

ஈராக் சண்டையில் பிரிட்டிஷ் வீரர்கள் பலர் கொல்லப்படலாம். அதைத் தவிர்க்க பிரிட்டிஷ் படைகள் நாடு திரும்பி விட வேண்டும்.


எவ்வளவு காலம் தேவையோ அவ்வளவு காலத்திற்குப் போர் நீடிக்கும் என்கிறார் அமெரிக்க அதிபர் புஷ். அவரைப் பொறுத்தவரையில் அது சரிதான். ஹேம்ப் டேவிட்டில் ஆடம்பர வசதிகளோடு விடுமுறையைக் கழிக்கிறார் அவர்.

புழுதிப் புயலில் சிக்கி பல்வேறு துயரம் துன்பத்திற்கு ஆளாகிவரும் வீரர்களில் ஒருவராக இருந்து அவர்களைப் போல பிரச்சினையை அனுபவித்தால் இத்தகைய பிடிவாதம் காட்டமாட்டார் புஷ்.

பக்தாத்தைச் சுற்றிவளைப்பது மிக எளிதானதாக இருக்கும் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சருக்கு மிகவும் நெருக்கமான ஒரு அதிகாரி தெரிவித்திருந்தார். சதாமின் படைகள் சரண் அடைந்துவிடும் என்றும் சிலர் குறிப்பிட்டிருந்தனர்.

ஈராக்கின் சிறப்பு அதிரடிப் படைகள் சண்டையில் இறங்காமல் தமது ஆயுதங்களை ஒப்படைத்துவிடும் என்று போர் தொடங்குவதற்கு முன்பு அமெரிக்கத் துணை அதிபர் டிக் செனி தெரிவித்திருந்தார். (பி)

WORLD NEWS உலக தரிசனம்



இந்தோநேஷியாவில் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஜாகார்த்தாவில் திரண்ட பிரம்மாண்ட கூட்டத்தை இங்கே காணலாம்.

# சதாமின் விசுவாசிகளைக் கொல்ல ஈராக்கில் யு.எஸ்.விசேட படை?

(வாஷிங்டன்)

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனுக்கு விசுவாசமான அதிகாரிகளைக் கொலை செய்யும் முயற்சியில் அமெரிக்க இராணுவத்தின் விசேட பிரிவு ஒன்று ஈராக் நகரங்களில் செயற்பட்டு வருவதாக வாஷிங்டன் போஸ்ற் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சதாம் ஹுசைனின் பாக். கட்சி அதிகாரிகள் மற்றும் விசேட குடியரசு காவல்படையின் தளபதிகள் ஆகியோரே இவ்வாறு இலக்காக கொள்ளப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிகாரிகளை மேற்கோள் காட்டி இச்செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

குறிபார்த்து சுடுவதிலும், வீடுகள் மற்றும் கார்களுக்கு குண்டுகள் வைக்கும் நிபுணர்களும் இந்த விசேட படைப்பிரிவில் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பக்தாத்தில் இதுவரை இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் ஒரு சில, இப்படைப்பிரிவினரால் நடத்தப்பட்டவை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஈராக் நஜாப்ஸ் நகரில் அமெரிக்க சோதனைச் சாவடி ஒன்றுக்கு அருகே இடம்பெற்ற கார் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 5 பேர் கொல்லப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இச்சம்பவத்தின் போது காரில் பிரயாணம் செய்தவர்கள் எத்தனை பேர் என்பது பற்றியும், இத்தாக்குதல் நடத்தி உயிரிழந்த அமெரிக்க படையினர் எண்ணிக்கை பற்றியும் முழுமையான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை என்று அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர். (பி-2)

# ஒளியின் வேகத்தைக் குறைத்து சாதனை

(ஹைதராபாத்)

ஒளியின் வேகத்தை கணிசமாகக் குறைக்கும் புதிய எளிய வழிமுறைகளைக் கண்டுபிடித்துச் சாதனை புரிந்துள்ளனர் அமெரிக்க விஞ்ஞானிகள். அதுவும் அறையில் நிலவும் சாதாரண வெப்பநிலையிலேயே ஒளியின் வேகத்தைக் குறைத்துள்ளனர். எனவே தொலைத் தொடர்பு கம்பியூட்டர் தொழில் நுட்பங்களில் அது பயன்படுத்தப்படுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

வெற்றிடத்தில் ஒளியானது விநாடிக்கு 30 கோடி மீற்றர் வேகத்தில் பயணம் செய்யும் சிவப்பு கெம்புக்கல் படிகத்தைப் பயன்படுத்தி ஒளியின் வேகத்தை நத்தை வேக அளவுக்கு அதாவது விநாடிக்கு 57.5 மீற்றர் என்ற அளவுக்கு குறைத்து விட்டனர் அந்த விஞ்ஞானிகள்.

அமெரிக்காவின் ரோசெஸ்டர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி எம்.எஸ்.பிஜ்லோ தலைமையிலான குழு இச்சாதனையைப் புரிந்துள்ளது. இதற்கு ஆர்கான்-அயனி லேசரை அவர்கள் பயன்படுத்தியுள்ளனர். அதைக் கெம்புக்கல் (சிவப்புக் கல்) வழியாகச் செலுத்தும் போது அந்த லேசரின் வேகம் விநாடிக்கு 57.5 மீற்றராகக் குறைந்து விடுகிறது. இது மிகவும் எளிமையான முறையாகும் என்று இயற்பியல் ஆய்வு இதழ் தெரிவித்துள்ளது. (பி)

# நோய் தீர்க்கும் மருந்துகளின் தவறான பாவனை வேண்டாத விபரீத விளைவுகளை ஏற்படுத்தும்

‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்’என்பதற்கிணங்க மக்கள் நோயின்றி வாழவே விரும்புகின்றனர். இதற்கு அவர்களின் பழக்க வழக்கம்,உடல் நிலை, சுற்றாடல் என்பன சீராகஇருத்தல் அவசியம். ஆனால் இவ்வாறான காரணிகள் நன்றாக இருந்தும் அவற்றையும் மீறி மக்கள் நோய்களின் அச்சுறுத்தல்களுக்கு ஆளாகிக் கொண்டே இருக்கின்றனர். நவீன உலகில் புதிய,புதிய நோய்கள் கண்டறியப்பட்டாலும் அவற்றிற்கு எதிராகப் புதியநவீன மருநதுகளும் கண்டு பிடிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. எனினும் இம் மருந்துகளின் பாவனை,1.ஒரு வரையறைக்குட்பட்டதாகவும்,2. வைத்தியர்களின் ஆலோசனைக்கு அமைவானதாகவும் இருத்தல் இன்றியமையாததாகும்.

எமது பிரதேசத்தைப் பொறுத்த வரை இந்த இரண்டு விடயங்களும் மருந்துப் பாவனையில் மிகமுக்கியமான இடத்தைப் பெறுகின்றன. இவற்றின் மீது காட்டப்படுகிற அலட்சியப் போக்கானது, மக்களின் மீது பல்வேறு பக்க விளைவுகளை உண்டு பண்ணுகிறது. குறித்த ஒவ்வொரு மருந்துப் பொருளும் அவற்றிற்குப் பொருத்தமான முறையிலும் மற்றும் 1) நோயாளியின் வயது,2) நோயின் தன்மை,3)நோய்க் காரணி என்பவற்றைப் பொறுத்தும், பாவனை முறையில் வேறுபடும். எனினும் மக்கள் இவற்றைக் கருத்திற் கொள்ளாது தாம் விரும்பிய முறையில் இம் மருந்துகளைப் பாவிக்கின்றனர். இதன் மூலம் அவர்கள் பல்வேறு ஆபத்தான நிலைமைகளுக்கு ஆளாக வேண்டியுள்ளது. நாம் தவறான பாவனை எனும் போதுபின்வரும் பாவனை முறைகளை உதாரணமாகக்கூறலாம்.

### மருந்துகளைச் சரியான அளவுகளில் பாவிக்காமை

நோயின் தன்மையைப் பொறுத்தும் நோயாளியின் வயதைப் பொறுத்தும் மருந்துகளின் அளவுகள் மாறுபடும். எனவே வைத்தியரின் ஆலோசனைப்படி சரியான அளவுகளில் அவற்றை உட்கொள்வதன் மூலம் நோயிலிருந்து குணமடையலாம். மருந்துகளின் அளவுகளில் ஏற்படும் தவறுகளாகப் பின்வரும் முறைகளைக் கூறலாம். 1)சில நோயாளிகள் தமக்கு வழங்கப்பட்ட மருந்தை ஒரு தடவை எடுக்கத்தவறும்போது அதனை மற்றைய தடவைக்கான மருந்தின் அளவுடன் சேர்த்து எடுக்கின்றனர். 2) சிலர் தாம் எடுக்கவேண்டிய அளவை விடக் கூடுதலாகவோ ,குறைவாகவோ எடுக்கின்றனர்.

### மருந்தைக் குறித்த கால இடைவெளியில் குறித்த நாட்களுக்குள் எடுத்து முடிக்காமை

ஒரு மருந்தைச் சொல்லப்பட்ட அளவில், குறித்த நேர இடைவெளியில் பாவிக்கும்போதே அது குருதியில் போதுமான அளவில் பேணப்பட்டு நோயில் இருந்து விடுபட உதவும். அதை விடுத்துப் பின் வரும் முறைகளைக் கையாளுதல் தவறானதாகும்.1) சொல்லப்பட்ட நேர இடைவெளியில் பாவிக்காமல் குறைவான அல்லது நீண்டநேர இடைவெளியில் மருந்துகளைப் பாவித்தல். 2)மருந்துகளைத் தொடர்ச்சியாக குறித்த நாட்களில் எடுத்து முடிக்காமல், இடைநிறுத்தல். இதற்குப்பிரதானமாக இரு காரணங்களைக் குறிப்பிடலாம். (அ) ஓரிருநாட்கள் மருந்தைப் பாவித்தும் நோயின் அறிகுறிகள்

**மருத்துவ விளக்கம்.**

குறைகின்றன.அத்தோடு மருந்தைத் தொடர்ந்து பாவிப்பதை நிறுத்தல். (ஆ) சில மருந்துகளுக்கு வெளிக்காட்டப்படும் பக்க விளைவுகளுக்குப் பயந்து அம் மருந்துகளைத் தொடர்ந்து பாவிப்பதை நிறுத்துதல்.

### காலாவதியான மருந்துகளைப் பாவித்தல்

காலாவதிக்காலம் என்பது மருந்துகள பழுதடையாமல் இருக்கக் கூடிய கால எல்லையாகும். அதன் பின்னா அவை பழுதடைய வாய்ப்புண்டு. பின வரும் சந்தர்ப்பங்களில் காலாவதியான மருந்துகளைப் பாவிக்க வாய்ப் புண்டு.அ) குறித்த ஒரு மருந்தை நீண்ட நாட்களுக்கு வீட்டில் சேமித்து வைத்து பாவிக்கும் போது அவற்றின் காலாவதித்திகதி முடிவடைந்து விடலாம்.இதனை அறியாமல் அம்மருந்தை தொடர்ந்து பாவித்தல். ஆ)மருந்துக் கடைகளில் மருந்துகளை வாங்கும் போது காலாவதித்திகதியை அவதானிக்காமல் வாங்கிப் பாவித்தல்.

### வயது வந்தவர்களுக்கும் சிறுவர்களுக்கும்ஒரே அளவில் மருந்துகளைப் பாவித்தல்

மருந்துகளின் அளவினைத் தீர்மானிக்கும் காரணிகளில் நோயாளியின் வயது மிக முக்கியமான தொன்றாகும்.பெரும்பாலான மருந்துகள் சாதாரணமாக வயது வந்த ஒருவருக்கு வழங்கும் அளவை விட குறைவான அளவிலேயே சிறுவர்களுக்கும்,குழந்தைகளுக்கும் வழங்க வேண்டும்.அதை விடுத்து, சிறுவர்களுக்கு வளர்ந்தோர்களுக்குக் கொடுக்கும் அளவைப்போலவே மருந்தைக் கொடுப்பது ஆபத்தாக அமையலாம்.

உண்மையில் மக்களிடையே மருந்துகள்அவற்றின் பாவனை முறை, பக்க விளைவுகள் பற்றிய போதிய அறிவின்மையே இவ்வாறான தவறான பாவனைகளுக்கு முக்கிய காரணமாகும்.மேலும் வைத்தியர்களின் போதிய ஆலோசனை இன்றி இம்மருந்துகள் மக்களால் அதிகளவில் பாவிக்கப்படுவதற்கு பலகாரணங்களைக் குறிப்பிடலாம். அவற்றில் சில,1)எமது பிரதேசத்தில் போதிய வைத்தியசாலைகள் இல்லாமை. 2)தற்போது இருக்கும் வைத்தியசாலைகளிலும் தேவையான அளவு வைத்தியர் வசதி இல்லாமை. 3)வைத தியசாலைகளில் நிலவும் பாரிய மருந்துத்தட்டுப்பாடு.

இதனால் நோயாளிகள் பல சிரமங்களை எதிர்கொள்வதோடு அவற்றைத்தவிர்ப்பதற்காகப் பின்வரும் மாற்று வழிகளைக் கையாளுகின்றனர். 1)தனியார் வைத்தியசாலைகளுக்குச் சென்று பணத்தைக் கொடுத்து தமது நோய்க்கு மருந்துகளைப் பெற்றுக்கொள்கின்றனர்.2) மருந்துக் கடைக்குச் சென்று தமது நோயின் அறிகுறிகளைத் தெரிவித்துமருந்துகளைப் பெற்றுக்கொள்கின்றனர். 3)முன்பு ஒரு தடவை ஏற்பட்டநோய்க்குப்பாவித்த மருந்தினை மீண்டும் அதே போன்ற அறிகுறிகளுடன் ஏற்படும் (வேறு) ஒரு நோய்க்குப் பாவிக்கின்றனர். பல நோய்கள் ஒரே மாதிரியான அறிகுறிகளை வெளிக் காட்டும் என்பதை அவர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை.4) சட்ட ரீதியாக வைத்தியச் சான்றிதழ் இல்லாத நபர்களிடம் சென்று தமது நோய்ககான மருந்துகளைப் பெற்றுக் கொள்கின்றனர்.5)வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்தியர் அல்லாதோர்,தாம் வைத்தியசாலையில் மருந்துகள் பற்றிப் பெற்றுக் கொண்ட அனுபவத்தினூடாக தமக்கும் தமது உறவினர்களுக்கும் மருந்துகளைத் தாமே சிபார்சு செய்தல்.

மேற் கூறப்பட்ட வழி முறைகளில் பெரும்பாலானவை மக்களைத் தவறான மருந்துப் பாவனைக்கே இட்டுச் செல்கின்றன.

எனவே இத்தகைய தவறான மருந்துப்பாவனையினால் அதனைப் பாவிக்கும் நோயாளி மட்டுமல்ல வைத்தியர்களும் பெரும் சிரமங்களை (விளைவுகளை) எதிர்கொள்கின்றனர். அவற்றுட் சில, 1)மருந்துகளை அதிகளவில் உள்ளெடுக்கும்போது அவை நச்சுத்தன்மையாகமாறி உடலுக்குத் தீங்காகலாம். சாதாரணமாக நாம் பாவிக்கும் பனடோல் போன்ற வில்லைகளை மிக அதிகளவில் எடுக்கும்போது, அவை சிறுநீரகம்,ஈரல் போன்றவற்றைப பாதித்து இறுதியில் இறப்பை ஏற்படுத்தலாம்.2) நுண்ணுயிர்க்கொல்லிகளை பிழையான அளவில் வைதத்திய ஆலோசனையின்றி ஒழுங்கற்ற முறையில் நீண்ட நாட்களுக்குப் பாவிக்கும் போது அம் மருந்துகளை எதிர்த்து வளரக்கூடிய நுண்ணுயிர்கள் உருவாக்கப்படுகின்றன. இதனால் அவற்றிற்குரிய நுண்ணுயிாக் கொல்லிகளைப் பாவிக்க முடியாததோடு, அவற்றினால் நோய் குறைவடைவதாகவும் இல்லை. இத்தகைய எதிர்ப்புச் சக்தி கொண்ட நுண்ணுயிர்கள் ஏனைய மக்களைச் சென்றடைந்து அவர்களுக்கும் நோயை ஏற்படுத்தும்போது ஒரு சமுதாயத்திற்கே இத்தகைய நுண்ணுயிர்க் கொல்லிகளைப் பாவிக்க முடியாமல் போகின்றது.

3)மருந்துகளை வைத்திய ஆலோசனையின்படி தொடர்ச்சியாகக் குறித்த நாட்களுக்குப் பாவிக்காது இடை நிறுத்துவதால் நோய் மீண்டும் மீண்டும் வர வாய்ப்பு உண்டாகிறது. உதாரணமாக மலேரியாக்காய்ச்சலுக்காகத் தரப்படும் ‘குளோரோகுயின்’ எனப்படும் வில்லையைச் சரியான அளவில் குறித்த நாட்களுக்கு எடுக்காவிட்டால் மீண்டும் காய்ச்சல் ஏற்பட வாய்ப்புண்டு.4)பொதுவாக எந்த மருந்தினையும் அதிகளவில் எடுக்கும்போது வாந்தி,தலைச்சுற்று வயிற்றுநோ,வயிற்றுளைவு,தலையிடி, எனபன ஏற்படலாம்.5)ஒரே மருந்தை ஒரேமாதிரியான நோயைக் கொண்ட எல்லாநோயாளிகளும் பாவிக்க முடியாது. ஏனெனில் சில மருந்துகளுக்குச் சில நோயாளிகள் ஒவ்வாமை இயல்பை வெளிக்காட்டுவர்.இதனால் உடலரிப்பு, தலைச்சுற்று,மயக்கம் என்பன ஏற்படலாம். எனவே வைத்திய ஆலோசனையின் படியே இம் மருந்துகளைப்

ந. நிமோஜன்
மருத்துவபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

பாவிக்க வேண்டும்.6) கர்ப்பிணித் தாய்மார் தாம் விரும்பியவாறு மருந்துகளைப் பாவிக்கும்போது, அவற்றில சில மருந்துகள் கருப்பையில் உள்ள குழந்தையைக் குருதி மூலம் சென்றடைந்து அக் குழந்தையின் வளர்ச்சியைப் பாதிக்கச் செய்யும். இதனால் உடல் வளர்ச்சி,மூளை வளர்ச்சிகுன்றிய அங்கவீனமான குழந்தைகள் பிறக்கவாய்ப்புண்டு. எனவே வைத்திய ஆலோசனை இன்றி இம் மருந்துகளைக் கர்ப்பிணித் தாய்மார் பாவிப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

எனவே இத்தகைய விளைவுகளில இருந்து நாம் விடுபட வேண்டுமாயின் இவ்வாறான மருந்துகளை கவனயீனமாக தவறான வழி களில் பாவிப்பதை நிறுத்தி சிறந்த வைத்திய ஆலோசனையுடன் அவாகள் கூறுகின்றவாறு பாவிப்பது சாலச் சிறந்ததாகும். □

## வீடுகளுக்கு கல்வீச்சு

(குருநகர்)

குருநகர் கடற்கரை வீதி ,மவுண் கார்மல்வீதி ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு இரவு நேரங்களில் இனந்தெரியாத ஒரு குழுவினரால் கல் வீசப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் வீடுக்கூரைகள சேதமடைவதுடன்,வீட்டுப் பாவனைப் பொருட்களும் சேதமடைவதாகக் கூறப்படுகிறது. (உ-74)

## மாணவர் தலைவர் தெரிவு

(சரசாலை)

யாழ். பல்கலைக்கழகத்தின் 2002/2003 ஆம் ஆண்டுகளின் மாணவத் தலைவரிற்கான,கடந்த 26ஆம் திகதி நடைபெற்றதேர்தலில பொருளியல் துறையைச் சார்ந்தபகிரதன் மாணவத் தலைவராக தெரிவு செய்யப் பட்டுள் ளார். (உ.50)

## மருதடியில்கடைகள் அமைக்க முன்னனுமதி

(சுதுமலை)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயச்சூழலில் திருவிழாக்காலங்களில் கடைகள் அமைப்பவர்கள் வலி.தென்மேற்கு பிரதேச சபையின் முன் அனுமதி பெற்றபின்னரே அமைக்கவேண்டும் என சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலாளர் எஸ். செல்வராசா கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளார். (பி-252)

## சனசமூகநிலையம் இடமாற்றம்

(கொழும்புத்துறை)

பாசையூர் புனித அந்தோனியார் மக்கள் முன்னேற்ற சனசமூக நிலையம் தற்போது,அந்தோனியார் வீதியில் உள்ள கட்டடம் ஒன்றில் இயங்கி வருகிறது.

மேற்படி சனசமூக நிலையம் முன்பு கடற்கரை வீதியில் அமைந்திருந்தமையும், அண்மையில் இராணுவத்தினரால் அவ் வீதி மூடப்பட்டமையால் சனசமூக நிலையம் இயங்க முடியாமல் இருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (பி-51)

## குடிநீர்வழங்கல்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மக்களின் குடிநீர் தடடுப்பாட்டை நீக்கும் நோக்குடன், சர்வோதயம் பவுசர்கள் மூலம் நீர் வழங்கி வருகிறது.

சர்வோதயத்தின் இந்நீர் வழங்கலுக்கு இலண்டனில் வாழும் இத் தீவைச் சேர்ந்த 17 இளைஞர்கள்நிதி உதவி வழங்கிவருகின்றனர்.(பி-7)

## சமாதானஆர்வலர் இலங்கை வந்தார்

(கொழும்பு)

சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்றவரும் வடஅயர்லாந்தின் ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் முன்னாள் தலைவருமான ஜோன்ஹும் 5 நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று இலங்கை வந்துள்ளார்.

இவர் இங்கு தங்கி நிற்கும் நாட்களில் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்கவினையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்துப் பேசவிருப்பதுடன் கிளிநொச்சிக்கு விஜயம் செய்து தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை,வடஅயர்லாந்தில் 30 வருடங்களாக நிலவி வந்த இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதன் பொருட்டு இவர் மேற்கொண்ட முயற்சிக்காக 1998ஆம் ஆண்டு இவரிற்கு சமாதானததிற்கான நோபல் பரிசு கிடைத்திருந்தமையும்,

சமாதானத்திற்காக இவர் மேற்கொண்ட முயற்சிகளைப் பாராட்டி சர்வதேச மனித உரிமை விருது மாாடின் லூதர்கிங் விருது,காந்தி வருது உட்பட பல விருதுகள் வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ-10)

## உயிர் கொல்லி காய்ச்சல்அச்சுறுத்தல்

# தென்கிழக்காசியாவில் இருந்து இலங்கை வருவோர் மீது நுணுக்கமான பரிசோதனை

(கொழும்பு)

சீனா,ஹொங்கொங்,ஹனோய், வியட்நாம்,சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இருந்து இலங்கை வரும் பிரயாணிகளை கட்டுநாயக்கா விமானநிலையத்தில் நுணுககமாக பிரிசோதித்தபின்னரே உள்ளே அனுமதிக்குமாறு சுகாதாரத் திணைக்களம் விமான நிலைய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

சாாஸ் (SARS) எனப்படும் உயிராபத்தை ஏற்படுத்தும் தொற்றுக் காய்ச்சல் பரவாமல் தடுக்கும் ஏற்பாடாகவே இவ் உத்தரவு இடப் பட்டுள்ளது.

தென் கிழக்கு ஆசியாவில் மிக வேகமாகப் பரவிவரும் இந் நோய்க்கு 100.4 பாகை பரனைட் காய்ச்சலும், சுவாசத்தில் சிக்கலும் அறிகுறியாகும்.

ஆட்கள் நெருங்கித் தொடர்புபடும போது இது தொற்றிக் கொள்வதாக சுகாதார அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

13 நாடுகளில் மொத்தம் 54 பேர்கள்இதனால் இறந்துள்ளனர். சீனாவிலும் ஹொங்கொங்கிலுமே அதிகமானவர்கள்பாதிக்கப்பட்டுள்ளனர். மொத்தம் ஆயிரத்து 550 பேர் முழு உலகிலும் இதனால் இப்பொழுது பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நோய் இப்பொழுது வேகமாகப்பரவிவருவதாகவும்ஹொங்கொங்கில் ஒரே நாளில் 58 பேர் இதனால் பீடிக்கப் பட்டுள்ளனர் என்றும் பிணித் தடுபபு நிலையம் அறிவித்துள்ளது.

இது பாரதூரமான உலகப்பிரச்சினையாக மாறமுடியும் என்றும் இதுவரை அறிமுகமாகாத வகைவைரஸ்இது என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் எதிர்வுகூறியுள்ளது. (உ)

## நச்சுப் புகைப்பாதிப்பை நீக்கும் புதிய திட்டம் காலியில் ஆரம்பம்

(கொழும்பு)

வாகனங்களில் இருந்து வெளியேறும் கறுப்பு நிறமான நச்சுத் தன்மை வாய்ந்த புகை,சுற்றாடலைப் பாதிக்காத வகையில் புதிய திட்டம்ஒன்று காலியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்திற்கு வடமேல் மாகாண சபையின் கைத்தொழில் சேவைப் பிரிவின் உதவியும் பெறப்பட்டுள்ளது.

கெலீஸ் குறூப் பியற்றா நிறுவனம் என்பனவும் இதற்கு உதவி வழங்க முன்வந்துள்ளன.

அத்துடன், இத்திட்டத்திற்கு ஒரு கோடி 25 லட்சம் ரூபாவை அமெரிக்க சுற்றாடல் ஒத்துழைப்பு நிறுவனம் வழங்குகின்றது.

இதேவேளை,கடந்த இரு நாட்களாக சுமார் 25 ஆயிரம்வாகனங்கள் இத்தகைய பரிசோதனைக் குட்படுத்தப்பட்டுள்ளதுடன், அது வெற்றியளித்திருப்பதாகவும் இதன் மூலம் வாகனங்களில் இருந்து வெயளியோறும்கறுப்புநிற நச்சுத் தன்மையான புகை சூழலைமாசு படுத்தாத வண்ணம் இப்புதிய திட்டம் அமைந்துள்ளதாக காலிப் போக்குவரத்துப்பிரிவுப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (பி-10)

## குற்றச் செயல்களைத் தடுக்க மரண தண்டனை அவசியமானது

### உள்துறை அமைச்சர் வலியுறுத்து

(கொழும்பு)

தற்போது நாட்டில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களைக் கட்டடுப்படுத்தும் ஓர் அங்கமாகவே மரண தண்டனை மீண்டும்அமுல் படுத்தவுள்ளதாக உள்துறை அமைச்சர் ஜோன்அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து வெளியிட்ட உள்துறைஅமைச்சர்,

குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு தற்போது நடை முறையில் உளள தண்டனைகள் போதுமானவை அல்ல.

எதிர் வரும் மே மாதம் முதல் மரணதண்டனையை அமுல் படுத்துவது தொடர்பாக பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படவுள்ளது.

இவ் விவாதத்தின் மூலம் மரண தணடனையை மீண்டும் அமுல படுத்துவதா? இல்லையா? எனபது தொடர்பாக பாராளுமன்றத்தில் விரிவான கருத்துப் பரிமாற்றம் நடைபெறும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

பாராளுமன்ற ஒத்திவைப்பு விவாதமாக இந்த யோசனை மீதான விவாதம் முன்னர் நடைபெறும் என அறிவிக்கப்பட்டமைகுறிப்பிடத்தக்கது. (உ-8)

# போர்நிறுத்த ஒப்பந்தம் நிரந்தரத் தீர்வைப் பெற வழிவகுக்காது

## புலிகளுக்கு சலுகைகளை வழங்கவே உருவாக்கப்பட்டது என்கிறார் கதிர்காமர்

(கொழும்பு)

நோர்வே அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அதிக சலுகைகளை



வழங்கி வருகிறது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் குற்றம் சாட்டியுள்ளார்.

அண்மையில் லண்டனில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கிளை அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்திலே கலந்துகொண்டு பேசுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில், இலங்கை மக்களின் நலனைக் கருத்தில் கொள்ளாத நோர்வே அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கே பெருமளவு சலுகைகளை வழங்கி வருகிறது.

அத்துடன், உலக அரங்கில் தன்னை முக்கிய பங்காளராக நிலை நிறுத்திக் கொள்ளவும் முயன்று வருகிறது.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு அனுசரணையாளராக வந்த நோர்வே அரசு-விடுதலைப்புலிகளிற்கு சலுகைகளை வழங்குவதில் ஆர்வம் காட்டுவது துரதிர்ஷ்ட வசமான தொன்றாகும.

இன்றைய சமாதான சூழ்நிலையில் இலங்கை மக்களின் மனநிலை சற்று மாறியுள்ளது. போரினால் உறுவுகளை இழக்கும் சந்தர்ப்பமும் எந்தநேரம் எங்கு குண்டு வெடிப்பு இடம்பெறுமோ என்ற அச்ச நிலையும் மக்கள் மனதை விட்டு அகன்றுள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் நாட்டில் அமைதி ஏற்பட்டுளளபோதும் இவை நிரந்தரத் தர்வைப்பெற வழிவகுக்கும் எனத் தோன்றவில்லை.

இது விடுதலைப்புலிகளுக்கே சில வாய்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை அரசாங்கத்தையும், உதவி வழங்கும் நாடுகளையும் பயன்படுத்திக் கொண்டு தமது சில தேவைகளை நிறைவு செய்து கொள்வதுடன் எவ்வித எதிர்ப்புமின்றி அனைத்து நாடுகளிற்கும் சுதந்திரமாக சென்று வருகிறார் கள.

நோர்வேயின் நிலைதான் இப்படி என்றால் ஜப்பான் அரசும் இலங்கை விவகாரத்தில் தலையிட ஆரம்பித்துள்ளது.

ஜப்பான் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் உறுப்புரிமையைப பெற்றுக் கொள்ளும் நோக்குடன் தமது பரிசோதனைகளை நடத்திக் கொள்ளும் சிறிய ஆய்வு கூடமாக இலங்கையைப் பயனபடுத்திக் கொள்ள, இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் தலையிடத் தொடங்கியுள்ளது.

இதேவேளை, இலங்கை அரசாங்கத்திற்கு இவை எல்லாம் பெரிய தலையிடியைக் கொடுத்துள்ளன ஏனெனில்,

ஜப்பானின் தலையீட்டைத் தடுத்தால் நிதியுதவிகளை இழக்கும் அவலம் இலங்கைக்கு வந்துவிடும்.

அதேசமயம், இந்த விடயத்தில் இந்தியாவின் தலையீடும் மிக அவசியம் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன் என்றார். (உ-10)

## கௌரவிப்பு விழா

(சுண்டுக்குழி)

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் கப்ரின் டி.ஏ.எம். குணசிங்கம் உதைபந்தாட்டததிற்கு ஆற்றிவரும் சேவையை பாராட்டி அகில இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம், அதி உயர் "தேசிய விருது" வழங்கியமையைக கௌரவித்து யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நேற்று முன்தினம் அவருக்கு பாராட்டு விழா ஒன்றினை நடாத்தியது.

ஈச்சமோட்டையில் அமைந்துள்ள சங்கப் பணிமனையில் யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ். கிளிபேட் அன்ரனிப்பிள்ளை தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில, லீக்கின் உப தலைவர்களில் ஒருவரான எஸ். தி. கணநாதன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு விழா நாயகருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

இந்நிகழ்வில், எஸ்.கிளிபேட் அன்ரனிப்பிள்ளை, மத்தியஸ்தர் சங்கச் செயலாளர் இ. ஆனல்ட், பொருளாளர் எம். பிரான்சிஸ், மத்தியஸ்தர்களான மயில்வாகனம், எஸ். திருஞானசம்பந்தர் யாழ். பல்கலைக்கழக உடற்கல்விப் போதனாசிரியர் எஸ். இளம்பிறையன் ஆகியோரும்கலந்துகொண்டனர். (உ-110)

# கப்பல் தாக்கியழிப்பால் சீற்றமுற்ற புலிகள் போரை நாடாமைக்கு பலமின்மையே காரணம்

## மாத்தறைக் கூட்டத்தில் பிரதமர் விளக்கம்

(கொழும்பு)

நோர்வே அரசாங்கமும், பொது ஜன ஐக்கிய முன்னணியின் முனனாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் இணைந்து தயாரித்த சமாதான நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையிலேயே தற்போதைய புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாத்தறை கொட்டுவேகொடை சனத்ஜயசூரிய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு பேசும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய பிரதமர்,

கடந்த 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின் பின்பு நோர்வே அரசாங்கத்துடன் ஐக்கிய தேசிய முன்னணி அரசு சமாதான வேலைத்திட்டங்களை ஆரம்பித்த போது முன்னர் நோர்வே அரசாங்கமும் முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் இணைந்து தயாரித்த நிகழ்ச்சி நிரல் கருத்தில் எடுக்கப்பட்டது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும் அதேவேளை, பாதுகாப்புத் தரப்பினரை விழிப்பாக இருக்குமாறும் அந் நிகழ்ச்சித் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

கடல்மற்றும தரையில் எதிர்பாராத பல சம்பவங்கள் இடம்பெற்று இருக்கின்றன. எனினும், இருதரப்பினரும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முடிவுகளுக்கு இணங்கியதால் மேலும் பிரச்சினைகள் வளராது தடுக்கப்பட்டு வருகின்றன.

ஜப்பானில் நடந்த 6ஆம் சுற்றுப் பேச்சுவார்த்தைக்ளின் போது யுத்த நிறுத்தத்தை சாதகமாகப் பயன்படுத்தி இலங்கை அரசாங்கம தமது படைகளை பலப்படுத்தி வருகிறது என தமிழீழ விடுதலைப்புலிகள் அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தினார்கள்.

முல்லைத்தீவுக் கடலில் கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவததை அடுத்து தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் ஓர் போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கலாம்.

ஆனால், அவர்கள் யுத்தத்தை விரும்பாது, சமாதானத்திலேயே உறுதியாகவுள்ளனர். இதிலிருந்து புலிகளின் படைப்பலம் இன்னமும் வலுவடையவில்லை என்பது புரிகிறது.



அத்தோடு யுத்தநிறுத்தம கைச்சாத்திடப்பட்ட காலம் தொடக்கம் உலக நாடுகளால் சமாதானமே வலியுறுத்தப்பட்டு வருகிறது என்றார். (உ-08)

## படைமுகாம் அமைக்கும் முயற்சி

# தமிழ்நிலத்தை ஆக்கிரமிக்கும் எண்ணத்தின் வெளிப்பாடு

### ஈ.பி.ஆர்.எல்.எவ். கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் படைமுகாம் அமைக்கப்படுவதைக கண்டித்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் க. பிறேமச்சந்திரன் பத்திரிகைக் குறிப்பொன்றினை வெளியிட்டுள்ளார்.

அந்த கண்டனக் குறிப்பில், யாழ். மாநகர சபைக்கான நிலத்தை இராணுவம் தனது முகாமமைப்பதற்காக பலாதகாரமாக எடுக்க முயற்சிப்பது எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாத விடயமாகும்.

பாடசாலைகள், விளையாட்டரங்கம, பூங்கா, பொது நூலகம், நீதிமன்றம் போனறவை அமையவுள்ள ஓர் அமைதிப் பிரதேசத்தில் நிரந்தரமாக இராணுவம் நிலை கொள்ள முயற்சிப்பது நீண்டகால அமைதிக்கு குத்தகமாகவே இருக்கும்.

யுத்தநிறுத்தம் ஏற்பட்டு ஒரு வருடமாகிவிட்டது. நிரந்தர யுத்த நிறுத்தம், நிரந்தர சமாதானம் ஆகியவற்றிற்காக, பேச்சுவார்த்தை நடாத்திக் கொண்டிருக்கும் போது, யாழ. நகரத்தில் தொடர்ந்து இராணுவத்தை வைத்திருக்க வேண்டியது அவசியம்தானா என்பதையும் அரசு சிந்திக்க வேண்டும்.

ஞானம்ஸ் ஹோட்டல், சுபாஷ் ஹோட்டல் போன்றவற்றில் இருந்து வெளியேற வேண்டும் என்பதற்காக, மக்களின் பொது நிலங்களை ஆக்கிரமிப்பதானது எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ளப்படமுடியாததாகும்.

அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் ஆயிரக்கணக்கான மக்களை தமது சொந்த இடங்களில குடியமர மறுத்து வரும் இராணுவம், தொடர்ந்தும் முக்கிய நிலங்களையும், இடங்களையும் ஆக்கிரமிப்பதிலேயே ஆர்வம் காட்டி வருகின்றது. சாதாரணமாக மக்க்ளின் பாதுகாப்பை உறுதிப் படுத்த வேண்டிய இராணுவம், தமது பாதுகாப்பிற்காக மக்களை அவர்களது சொந்த இடங்களில் இருந்து விரட்டுவது கேலிக்குரியது மாததிரமல்ல கண்டத்துக்குரியதுமாகும்.

சமாதானத்திற்கான பேச்சுவார்த்தையை நடாத்திக்கொண்டு மக்களின் மீள்குடியேற்றத்தை தடைசெய்வதும், தொடர்ந்து நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்வதும் பேச்சுவார்த்தை மீது அரசுக்குள்ள நம்பிக்கையீனத்தையே காட்டுகின்றது.

எனவே, ஆக்கிரமிப்பை கைவிட்டு பேச்சுவார்த்தையில் நம்பிக்கை வைத்து செயற்படும்படி இலங்கை அரசைக் கோருவதுடன், யாழ். மாநகரசபைக்குரித்தான நிலத்தை இராணுவம் ஆக்கிரமிப்பதை உடன் நிறுத்துமாறும், பிரதமரையும், இலங்கை அரசையும் கோருகின்றோம்.

இல்லையேல் மக்கள் எழுச்சிகளும், மக்கள் போராட்டங்களும் தான், இதனை தடுப்பதற்கு வழி என்றால் நாங்கள் அதனைச் செய்யவும தயாராகஇருக்கின்றோம் என்று ள்ளது. (உ-43)

## வடக்கு-கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல்

# தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களை ஏற்பதா? இல்லையா? – அரசு பரிசீலனை

(கொழும்பு)

வடககு-கிழக்கு மாகாணத்தில உள்ளூராட்சித் தேர்தலை எதிர்வரும் ஜுன்மாதம் 25ஆம் திகதி நடத்துவதற்கான ஏற்பாடுகள செய்யப்பட்டுள்ள சமயத்தில், இத்தேர்தலிற்கு கடந்த வருடம் தாக்கல் செய்த வேட்பு மனுக்களை ஏற்பதா? அல்லது அவற்றை நிராகரித்து விட்டு புதிய வேட்பு மனுக்களை தாக்கல் செய்யும்படி கூறுவதா? என் அரசாங்கம் பரிசீலனை செய்து வருகின்றதாக உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் அலுக் அலுவிகார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர்மேலும் கருத்து வெளியிடுகையில், தேர்தலை நடத்துவதற்காக கடந்த வருடம் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களை அரசாங்கம் உடனடியாக நிராகரிக்க முடியாது.

ஆயினும் அதனை நிராகரித்து புதிய வேட்பு மனுக்களைக் கோருவதற்குரிய வழிவகைகள் ஏதாவது இருக்கின்றதா என அரசு ஆராய்ந்து வருகிறது என்றார்.

இதேவேளை, புளொட் இயக்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான த. சித்தார்த்தன் தேர்தலை நடத்துவதற்காக கடந்த வருடம் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களை நிராகரித்து புதய வேட்புமனுக்கள் கோருவதை தாம் அனுமதிக்க முடியாது என தெரிவித்துள்ளார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் ஐச் சேர்ந்த சுரேஷ்பிறேமச்சந்திரன் கருத்து வெளியிடுகையில், தேர்தல் நடைபெறவேண்டும் என்பதை வரவேற்றதுடன் வேட்புமனுக்கள் புதிதாக கோரப்படவேண்டும் என்றுள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின பொதுச் செயலாளர் இரா.சம்பந்தன் தேர்தலை வரவேற்கிறோம். ஆனால் தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது என்பது பற்றி கட்சியின் மத்திய குழுவே தீர்மானிக்கும் என்று தெரிவித்துள்ளார். (உ-10)

## பிறந்ததின நிகழ்வு

(திருநெல்வேலி)

தந்தை செல்வாவின் 105வது பிறந்ததின நிகழ்வு நேற்று தமிழர் விடுதலைக் கூட்டணியில் யாழ். அலுவல்கத்தில் இடம்பெற்றது. (உ-43)

## மத்திய போக்குவரத்துச் சபைத் தலைவர்

# பரு. டிப்போவுக்குச் சென்று உண்மை நிலையை ஆராய்வு

(பருத்தித்துறை)

வடபிராந்திய போக்குவரத்துச் சபை பருத்தித்துறை டிப்போவுக்கு மத்தியபோக்குவரத்துச் சபைத் தலைவர் எஸ். பாரூக் அண்மையில் விஜயம் செய்து பருத்தித்துறை டிப்போ அபிவிருத்தி பற்றி ஆராயந்தார்.

செயலாளர் பியசோம நிர்வாக உத்தியோகத்தர் சேவியர், வடபிராந்திய போக்குவரத்துச் சபைப் பொது முகாமையாளர் எஸ். மணிவாசகம் உட்பட பல உயரதிகாரிகள இவ்வாறு விஜயம் செய்தனர்.

பருத்தித்துறை டிப்போவின் பொறியியல் பிரிவு, விநியோகபபிரிவு மற்றும் செயலாற்றுப் பிரிவுகளுக்குச சென்று பார்வையிட்டதுடன், இவர்கள ஊழியர்களுடனும் கலந்துரையாடினர்.

பின்னர் டிப்போமுகாமையாளர் எஸ். கமலநாதன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

முகாமையாளர் கமலநாதன் கூட்டத்திற்குத் தலைமைதாங்கி உரையாற்றுகையில்,

பருத்தித்துறை பஸ்டிப்போவில சாரதிகள், காப்பாளர்கள் பற்றாக்குறையினால் நாள்தோறும் 30 ஆயிரம் ரூபா வருமானத்தை இழக்கவேண்டிய அவலநிலை உள்ளது. இதனால் மக்களுக்குப் போதிய பஸ்சேவைகளையும் நடாத்தமுடியவில்லை.

16 சாரதிகளும், 18 காப்பாளர்களும உடனடியாகத் தேவைப்படுகின்றனர். இங்கு 36 பஸ்கள் இருக்கின்றன. இதில் 25 பஸ்களே ஓடும் நிலையில் உள்ளன. 5 பஸ்கள் மேலும் தேவைப்படுகின்றன.

பஸ்களுககு உதிரிப்பாகங்கள பற்றாக்குறையும் நிலவுகின்றது. சாரதி, காப்பாளர்கள் இளைப்பாற்று மண்டபமும் புனரமைக்கப்பட வேண்டும் என்றார். (உ-52)


போருக்கு எதிராக இந்தோனேஷியாவில் ஆர்ப்பாட்டம்


ஈராக் போருக்கு தயாராகவுள்ள யு.எஸ் படையினரின் பீரங்கிக் குண்டுகள்


வட இத்தாலியில் நடந்த ஆர்ப்பாட்டம்


டோக்கியோவில் ஜப்பானிய மாணவர்கள் ஆர்ப்பாட்டம்


ஈராக் மீதான போருக்கு அணிவகுத்துச் செல்லும் யு.எஸ் படை விமானங்கள்

## ஈராக் அதிரடிப்படையின் பலத்தை குறைத்து மதிப்பிட்டுள்ளது யு.எஸ்

(சிட்னி)

ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் சிறப்பு அதிரடிப் படையின் ஆற்றலைக் குறைத்து மதிப்பிட்டுள்ளது அமெரிக்க இராணுவத் தலைமையகம். அதனால் தான் ஈராக் மீதான அதன் இராணுவத் தாக்குதலில் எதிர்பார்த்தபடி முன்னேற்றம் இல்லை என்று அவுஸ்திரேலிய இராணுவத் துறை அமைச்சர் ராபர்ட் ஹில் கருத்துக் கூறியுள்ளார்.

செவன் நெட்வொர்க் தொலைக்காட்சிக்கு ஞாயிற்றுக் கிழமை அளித்த பேட்டியில் அவர் கூறியதாவது,

சதாம் ஹுசைனின் சிறப்பு அதிரடிப்படையின் முக்கியப் பணியே உள்ளூர்ப் பகுதிகளில் பாதுகாப்பில் ஈடுபடுவதாகும். ஆனால் இவற்றை கூட்டணிப்படைகளுக்கு எதிராக ஈடுபடுத்தியுள்ளது ஈராக். இவற்றின் தாக்குதல் கடுமையாக உள்ளது. அதனால் தான் அமெரிக்கப்படைகளால் விரைவாக முன்னேற முடியவில்லை.

இந்தப் போர் நீண்ட காலம் தொடரும் என்று கூறுவதற்கில்லை. ஆனால் கடினமானதாக இருக்கும் எனலாம்.

2000 வீரர்களை வளைகுடா அனுப்பியுள்ளது அவுஸ்திரேலியா. தம்மிடம் தற்போதுள்ள உணவு, ஆயுதம், எரிபொருள் இருப்பைக் கொண்டே பல மாதங்களுக்கு தமது நடவடிக்கைகளை இவர்கள் தொடர முடியும்.

இன்னும் கூடுதலான வீரர்களை அவுஸ்திரேலியா அனுப்பாது என்றார் ஹில். (பி)

## ஈராக் வீசிய ஏவுகணைகள் மீண்டும் அங்கேயே வீழ்ந்து சேதம்?

(லண்டன்)

ஈராக் வீசிய பல ஏவுகணைகள் பக்தாத் நகரம் மீது விழுந்தன என்று பிரிட்டன் அரசு தெரிவித்துள்ளது.

விமான எதிர்ப்புப் பீரங்கிகள் சரியான முறையில் இயக்கப்படாததால் விமானப் பாதுகாப்புக் கமாண்டரை ஈராக் மாற்றியுள்ளதாகவும் அது தெரிவித்துள்ளது.

ஈராக் ஏவிய பல ஏவுகணைகள் குறிப்பிட்ட இலக்கைச் சரியாகச் சென்று தாக்காமல் விண்ணில் வெடித்துச் சிதறுவதற்கு முன்பே பக்தாத் மீது விழுந்ததாக பிரிட்டன் கூறுகின்றது.

பக்தாத் நகரில் உள்ள சிவிலியன் பகுதிகளுக்கு சர்வதேசப் பத்திரிகையாளர்கள் செல்வதற்கு முன்பு அப்பகுதியில் விழுந்த ஏவுகணைகளின் பாகங்களை அகற்றுமாறு பொலிஸாருக்கு ஈராக் அரசு உத்தரவிட்ட தாகவும் பிரிட்டன் கூறுகிறது. (பி)

## சதாம் தங்கியிருக்கும பதுங்குகுழி அணுகுண்டுத் தாக்கத்தையும் சமாளிக்கும்

(பெர்லின்)

ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் மாளிகைக்கு கீழே பதுங்குகுழி அமைக்கப்பட்டுள்ளது. இது அணு குண்டு போட்டாலும் தாங்கக் கூடியது என்று இதை வடிவமைத்துத் தந்துள்ள ஜேர்மனி நிபுணர் கார்ல் எஸ்ஸர் தெரிவித்தார்.

ஏபி செய்தி நிறுவனத்திற்கு தொலைபேசி மூலம் ஞாயிற்றுக கிழமை அவர் அளித்த பேட்டியில்,

1980ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்டது இந்தப் பதுங்குகுழி. அப்போது 6 கோடி டொலர் செலவில் இது அமைக்கப் பட்டது.

ஜேர்மன் கம்பனி ஒன்று இதைக் கட்டியது. அதற்கு ஆலோசகராக நான் செயல்பட்டேன். ஹிரோஷிமா நகரை நாசமாக்கியது போன்ற அணு குண்டு இந்த குழியிலிருந்து 200 மீற்றருக்கு அப்பால் வெடித்தாலும் இது பாதிப்படையாது. 300 செல்சியஸ் வெப்பத்தைத் தாங்கக் கூடியது.

அமெரிக்கா வசம் தற்போதுள்ள அணுகுண்டு எதுவும் இதை ஒன்றும் செய்ய முடியாது. அணு குண்டால் நேரிடையாகத் தாக்கினால் தான் இது சேதமடையும். (பி)

## சர்வதேச போர் முறைகளை கடைப்பிடிக்கக் கோரிக்கை

(லண்டன்)

ஈராக் மீதான போரில் சம்பந்தப் பட்டுள்ள படைகள் சர்வதேச விதிமுறை களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரிடம் சர்வதேச பொது மன்னிப்பு அமைப்பின் (ஆம்னெஸ்டி) முக்கிய பிரமுகர்கள் அடங்கிய குழு ஞாயிற்றுக் கிழமை மனு அளித்தது.

சர்வதேச விதிகளை பிரிட்டிஷ் படைகள் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும் என்று பிளேயரிடம் அக்குழு வற்புறுத்தியது. மேலும் அமெரிக்கக் கூட்டணிப்படைகளிடமிருந்தும் இதே போன்ற உறுதிமொழியை பிளேயர் பெற வேண்டும். அதற்கான செல் வாக்கை பிளேயர் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் குழு கோரிக்கை விடுத்தது. இத்தகவலை சர்வதேச பொது மன்னிப்பு அமைப்பின் தலைமைச் செயலர் ஐரீன் கான் தெரிவித்தார். உலகம் முழுவதும் உள்ள 16 லட்சம் உறுப்பினர்களின் சார்பில் இந்த மனு அளிக்கப்படு கிறது என்றார் அவர். (பி)



பெய்ஜிங்கில் முதல் தடவையாக அரச அங்கீகாரத்துடன் நடந்த ஆர்ப்பாட்டம்.


ஜெனோவாவில் வீதியில் படுத்துக் கிடந்து ஆர்ப்பாட்டம்


ஜேர்மனில் பெண்கள் வீதிகளுக்கு வந்து ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.


ஈராக்கிலுள்ள அமெரிக்க வீரர்களின் குடும்பங்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டுள்ளனர்.


ஈராக்கிய பாலைவனத்தில் களைத்துப் போய் நிற்கும் அமெரிக்க போர் வீரர்


பாதுகாப்புக் கருதி பதுங்கு குழிகள் அமைக்கும் ஈராக்கியர்


அமெரிக்க குண்டு வீச்சுக்கு அஞ்சி ஈராக்கின் நசிரீயாவிலருந்து வெளியேறும் ஈராக் மக்கள்


பக்தாத்தில் விழுந்து வெடிக்காத குண்டொன்றை ஈராக்கிய அதிகாரிகள் பார்வைக்கு வைத்திருக்கும் காட்சி

## இன்னு ஒரு தகவல்

# உண்மை எது? பொய் எது?

ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவர் அடிக்கடி காட்டுக்கு வேட்டையாடப் போவார். சில நண்பர்களையும் கூட அழைத்துக் கொண்டு போவார். காட்டுக்குப் போனதும் ஆளுக்கு ஒரு பக்கமாகப் போய் வேட்டையாடுவார்கள். மாலையில் திரும்பிவருவார்கள். மறுநாள் அரண்மனையில் உட்கார்ந்து ஒவ்வொருவர் அனுபவங்களையும் சொல்லிக்கொள்வார்கள். அவரவர் வீரத்துக்குத் தகுந்த பரிசை ராஜா கொடுப்பார். இப்படி ஒரு தடவை எல்லோரும் வேட்டைக்குப் போய் விட்டுத்திரும்பி வந்ததும் உட்கார்ந்து பேச ஆரம்பித்தார்கள். ஒருவன் தன்னுடைய வீரதீரச் செயல்களைப் பற்றி அளக்க ஆரம்பித்தான்.

“அரசே! நேற்றுக் காட்டில் என்ன ஆனது தெரியுமா? எனக்கு நேராக ஒரு சிங்கம் வாயைத் திறந்து கொண்டு வந்து விட்டது. நான் பயப்படவில்லை. உடனே ஒரு கல்லை எடுத்து குறிபார்த்து வீசினேன். சிங்கத்தின் வாய்க்குள்ளே போய் அந்தக் கல்லு மாட்டிக் கொண்டது. அவ்வளவு தான்! அந்தச் சிங்கம் என்னைப் பார்த்துப் பயந்து கொண்டு ஒரே ஓட்டமாக ஓடிப்போய்விட்டது” என்றான். ஆகா! பலே! என்று எல்லாரும் கைதட்டினார்கள்.

இரண்டாவது ஆள், ஆரம்பித்தான். “அரசே! நான் போன வழியில் இரண்டு மலைப்பாம்புகள் கிடந்தன. என்னை விழுங்குவதற்கு வந்தன. நான் என்ன பண்ணினேன் தெரியுமா? அந்த இரண்டு பாம்புகளினுடையவால்களையும் ஒன்று சேர்த்து முடிச்சுப் போட்டுவிட்டேன். அவ்வளவு தான்! அது அங்கே இழுக்க இது இங்கேயிழுக்க முடிச்சு நன்றாக இறுகிப் போய்விட்டது” என்றான். “அற்புதம்” என்று சொல்லி எல்லோரும் கைதட்டினார்கள். அடுத்து மூன்றாவது ஆள்சொல்ல ஆரம்பித்தான். “அரசே! நான் போன பாதையில் குறுக்கே ஒரு ஆறு. அதில் இறங்கிக் குளித்தேன். யாரோ காலைப்பிடித்து இழுப்பது மாதிரி இருந்தது. திரும்பிப் பார்த்தால் ஒரு பெரியமுதலை! நான் உடனே பாய்ந்து அதன் முதுகில் போய் உட்கார்ந்து கொண்டேன். கரைக்கு நீந்த வைத்தேன். கரைக்குவந்ததும் குதித்து வந்து விட்டேன்” என்றான். “அடாடா! எப்பேர்ப்பட்டவீரம்” என்று எல்லோரும் கைதட்டினார்கள்.

நாலாவது ஆள் எழுந்தான். “மன்னா! நான் போன இடத்தில் ஒரு கரடி என்னைத் துரத்த ஆரம்பித்தது. நான் ஒரு மலை உச்சிக்கு வந்து விட்டேன். அதன் பின்னர் ஓர் அடி எடுத்து வைத்தாலும் அதல பாதாளத்திலே விழ வேண்டியதுதான். அந்த் நேரம் பார்த்து ஒரு பெரிய ராட்சசக் கழுகு அந்தப் பக்கமாகப் பறந்து வந்தது. உடனே நான் உயர எழும்பி அதன் காலைப் பிடித்துக் கொண்டேன். தொங்கிக் கொண்டே வந்தேன். ஒரு நல்ல இடம் வந்ததும் தொப்பென்று குதித்து நடந்து வந்துவிட்டேன்” என்றான். இதற்கும் எல்லாரும் கை தட்டினார்கள்.

கடைசியாக ஒருவன் எழுந்தான் “அரசே! நான் போன வழியில் ஒரு பெரிய யானை குறுக்கே வந்துவிட்டது. பயங்கரமாகச் சத்தம் போட்டுக்கொண்டே வந்தது. நான் பயந்து ஓடவில்லை. உடனே என்ன பண்ணினேன் தெரியுமா? அதன் வாலைப் பிடித்துத் தூக்கினேன். தலைக்குமேலை தூக்கி கரகரவென்று சுற்றி வேகமாக வீசி எறிந்தேன். அவ்வளவுதான், அந்த வேகத்திலே யானை மேலே போக ஆரம்பித்ததுதான் இன்னும் கூட அது போய்க்கொண்டே இருக்கிறது. கிழே விழவே இல்லை” என்றான்.

இதைக் கேட்டதும் ராஜாவுக்குக் கோபம் வந்துவிட்டது. “என்னை என்ன முட்டாள் என்று நினைத்துக் கொண்டு பேசுகின்றாயா? யானையை நீ வாலைப்பிடித்துக் தூங்கினாய் அதை நான் நம்பவேண்டுமா?” என்றார், உடனே இவன் பணிவாக, “அரசே! ஒரு சிங்கத்தின் வாயில் கல் மாட்டிக் கொண்டதையும், மலைப்பாம்பின் வாலைப் பிடித்து முடிச்சுப் போட்டதையும், முதலையின் முதுகில் சாவாரி பண்ணினதையும், கழுகின் காலைப்பிடித்துக் கொண்டு பறந்ததையும் நம்புகின்ற பொழுது, நான் சொன்னால் மட்டும் நம்பக் கூடாதா?” என்று கேட்டான்.

பொய் சொன்னவர்கள் எல்லாரும் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டார்கள். ரா்ஜா அவர்களைப் பார்த்து “நீங்கள் எல்லாருமே என்னை முட்டாளாக்கியிருக்கிறீர்கள், கடைசியாகப் பேசிய இவன்தான் எனக்கு உண்மை எது? பொய் எது? என்பதைப் புரிந்து கொள்ள வைத்தான். இவன் தான் உண்மையான தைரிய சாலி என்று சொல்லி, அவனுக்கே பரிசையும் கொடுத்துப் பாராட்டினார்.

உண்மையை நிலை நாட்டுகிறவன் தான் உண்மையான வீரன் என்பதை இதிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்தக் காலத்தில் பொய் சொன்னால் தான் பிழைக்க முடியும் என்பது சிலரது நம்பிக்கை. ஒரு அப்பாவுக்குத் தனது மகனுக்குப் பொய் சொல்லத் தெரியவில்லையே என்கின்ற கவலை. “பொய்சொன்னால் தான் இந்த உலகத்தில் பிழைக்கலாம, ஆனால் இவனுக்கு அது தெரியவில்லையே! அதனால் இவனை அழைத்துக் கொண்டுபோய் நடுக்கடலில் விட்டுவிட்டுவந்து விடுவோம்” என்று கடற்கரைக்கு அழைத்துக் கொண்டு புறப்பட்டார்.

மகனுக்குச் சந்தேகம், “எங்கே அப்பா என்னை அழைத்துக் கொண்டு போகிறாய்?” என்று கேட்டான். “உனக்கு கடலில் மீன் பிடிக்கக் கற்றுக் கொடுக்கப் போகிறேன்” என்றார். நான் ஏற்கனவே மீன்பிடித்துவிட் டேனே என்றான் மகன். “எங்கே அது?” என்று கேட்டார் அப்பா “சுட்டுச் சாப்பிட்டுவிட்டேன்” என்றான் மகன். “சரி நமது பிள்ளை பிழைத்துக் கொள்ளும்” என்று சொலலித்திருபபி அழைத்துக் கொண்டு வந்து விட்டார் அப்பா.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# மலையகத் தமிழ் மக்கள் அனைவரும் இ.தொ.கா.வின் கீழ்அணிதிரள வேண்டும்

## ஆறுமுகம் தொண்டமான் அறைகூவல்

(பண்டாரவளை)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைத் தரக் குறைவாகப் பேசும் ஒரு சில அரசியல்வாதிகள் தேர்தல் காலங்களில் காங்கிரஸின் தயவை நாடி நிற்கின்றனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்டுக்கோப்புடன் இருப்பதே இதற்குக் காரணமாகும் என்று அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

பண்டாரவளையில் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சர்வதேச மகளிர் தின விழாவல் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பண்டாரவளை நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற இவ் வைபத்தில அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது,

ஐக்கிய தேசிய முன்னணியினரால் கொழும்பில் நடத்தப்பட்ட பேரணியில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸினால் மட்டுமே பெரும் தொகையான மக்கள் கூட்டத்தை கூட்ட முடிந்தது என்று பலரும் கூறுகிறார்கள்.

இந்நிலையில் மலையக தமிழ் மக்கள் அனைவரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் கீழ் திரள வேண்டு என்று அவர் கேட்டுக் கொண்டார்.

இம் மகளிர்தின விழாவில் கண்டி, நுவரெலியா, பதுளை, பண்டராவளை, ஹற்றன், மஸ்கெலியா, இரத்தினபுரி, அவிசாவளை, மத்தளை ஆகிய இடங்களில் இருந்து பெரும் திரளான பெண்கள் கலந்து கொண்டனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவர் ஆர். யோகராஜன், பிரத்தித்தலைவர் எம். எஸ். செல்லச்சாமி, எஸ். ஜெகதீஸ்வரன், அமைச்சர் முத்து சிவலிங்கம், மாகாணக் கல்வி அமைச்சர் இராத கிருஷ்ணர் ஆகியோரும் இவ்விழாவில் உரை நிகழ்த்தினார்கள். (வ)

# பிரிட்டன்விசா வழங்குவதில் மோசடி தூதரக உயரதிகாரி சிக்கினார்

(கொழும்பு)

பிரிட்டனுக்கான விசா வழங்குவதற்கு பணத்தையும் பெண்களையும் சன்மானம் பெறும் மோசடியொன்று நடைபெற்றுவந்துள்ளதாகவும், இந்த விடயம் இப்பொழுது ஸ்கொட்லன்ட்யாட் பொலிஸாரின் விசாரணையிலுள்ளதாகவும் கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சிலரக விசாக்களுக்கு கையூட்டாக ஐந்து லட்சம் ரூபாவும், பெண்களும் கேட்டுப் பெற்றுவநததாக பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் அலுவலக அதிகாரி ஒருவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

குறித்த அதிகாரி பணியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக தூதரக அதிகாரியொருவர் தெரிவித்தபோதும் மேலும் விபரங்கள் கூற மறுத்துவிட்டார்.

குறித்த தூதரக அதிகாரி தூதரகத்தில் பத்துவருடங்களாக பணியாற்றி வருகிறார். விசாவுக்கு விண்ணப்பிக்கும் பெண் விண்ணப்பதாரிகள் நாவல என்னுமிடத்திலுள்ள அந்த அதிகாரியின் ஆடம்பர வீட்டிற்கு வரும்படி அழைக்கப்படுவார்களாம்.

விசாவுக்கு தகுதிபெறுவதில் குறைந்தளவு தராதரங்கள் உள்ளவர்கள இந்த வழிகளில் விசாவைப பெற்றுவர, சகல தகுதிகளுமுள்ள விண்ணப்பதாரிகளுக கு விசாவழங குவதில் கெடுபிடிகள் ஏற்படுத்தப்பட்டு வந்துள்ளமை தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

சில பிரயாணமுகவர்களின் ஒத்துழைப்புடனேயே இது நடைபெற்று வந்துள்ளதாகவும், இது பற்றிய விசாரணைகள இப்பொழுது ஸ்கொடலன்ட்யாட் பொலிஸார் நடத்தப்படுவதாகவும் தெரியவரு கிறது.(உ)

# சிறுமிகடத்தப்பட்ட சம்பவம் ம. உ. ஆணைக்குழு விசாரிக்கும்

(கொழும்பு)

ஊறுகொடவத்தை பகுதியில் சிறுமியொருத்தி கடத்தப்பட்டுத் துன்புறுத்தப்பட்ட சம்பவம்தொடர்பாக விசாரணை செய்ய இலங்கை மனித உரிமை ஆணைக்குழு முன் வந்துள்ளது.

இதன் பிரகாரம் விசேட உத்தியோகத்தர் குழுவொன்று விரைவில் விசாரணை செய்யவுள்ளதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, பொலிசார் குறிபபிட்ட சம்பவம் தொடர்பாக தகுந்த நடவடிக்கை எடுக்காத காரணத்தினாலேயே குழப்பம் ஏற்பட்டதாகவும் அப்பகுதியில் உள்ளமக்களை முதலில் விசாரணை செய்து வாக்குமூலங்களை மனித உரிமை ஆணைக்குழுபெற்றுக் கொள்ள வுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் பின்னர், பொலிஸ் அதிகாரிகளை இக்குழுவினர் விசாரிப்பதுடன சம்பவம் நடந்த இடத்திற்கு சென்று நேரடியாக அவதானிப்பு களை மேற்கொள்வார்கள் எனவும் கூறப்படுகிறது.

அத்துடன், எதிர் காலத்தில் இப்படியான ஒரு சம்பவம் நிகழாமல் தடுப்பதற்கு பொலிஸ்மா அதிபர் ரீ. ஆனந்தராஜாவிற்கும் பொலிஸாற்கும் மனித உரிமை ஆணைக்குழு சிபார்சுகளை வழங்கவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைத்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (பி-10)

## இராசி பலன்

**01.04.2003**

**(பங்குனி 18, செவ்வாய்)**

**அமாவாசை பி.இ. 1.25வரை**

**உத்தரடடாதி மு.இ. 11.06வரை**

**இராகுகாலம் 3.11 - 4.41**

**சுபநேரம் 10.41 - 12.11**

அமாவாசை விரதம், குழந்தைவேள் சுவாமிகள் குருபூசை

**மேடம்**
சயன சுகக் குறைவு, மனக்கிலேசம், சுரம், நண்பர்கள் விரோதம்

**இடபம்**
சந்தோசமான சம்பவம், ரோக நிவர்த்தி, நல்ல மனை வாசம், இஷ்டசித்தி

**மிதுனம்**
கருமசித்தி, நல்ல செய்தி, நிலை மாற்றம், தொழில் நன்மை

**கடகம்**
காரிய தாமதம், பித்தரோகம், மனச்சஞ்சலம், பிரயாணம்

**சிங்கம்**
ரோகபயம், கலகம், பிரயானக் கஷ்டம், முயற்சி தடங்கல்

**கன்னி**
சௌக்கிய விருத்தி, போசனசுகம், முயற்சி கைகூடும், பொருள் சேர்க்கை

**துலாம்**
மனமகிழ்ச்சி, சத்துரு ஜெயம், செய் தொழில் மேன்மை, காரிய அனுகூலம்

**விருச்சிகம்**
வியாபார நன்மை, மனக்கலக்கம், குடும்பக்கவலை, இனசனத்தொடர்பு.

**தனுசு**
உடல்நலக்குறைவு, சத்துரு பயம், முயற்சி தாதமதம், கல்வயில் ஆர்வம்

**மகரம்**
சகோதரர் உதவி, பொருள் சேர்க்கை, கூட்டுமுயற்சி, வாக்கு மேன்மை

**கும்பம்**
மாதர் நட்பு, வஞ்சகம், காரிய தாமதம், அதிக செலவு

**மீனம்**
பெரியோர் ஆதரவு, கற்பனை மிகுதி, வாக்கு மேன்மை, முயற்சி தாமதம்.

(பழையநேரப்படி கணிப்பிடப் பட்டது)

**வளவன்.**

# சுகாதார வாரம் இன்று ஆரம்பம

(சுதுமலை)

இன்று முதல் எதிர்வரும் 7ம் திகதி வரையிலான காலப்பகுதியை சுகாதார வாரமாக பிரகடனப்படுத்தி பல்வேறு செயற்பாடுகளின மூலம் மக்கள் மத்தியில் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர் வை ஏற்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அத்துலகேகந்தல நாயக்காவினால் சகல மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்களிற்கும் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கும் இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ள்து.

உலக சுகாதார தினத்தின பிரதானகருதுகோளாக “சிறுவர்களிற்கு ஆரோக்கியமான சூழலை ஏற்படுத்தல்” என்பது அமைகிறது.

பின்வரும் வடயங்களை உள்ளடக்கி, விழிப்புணர்வை ஏற்படுத்தும் படியும் இவை குடும்பம,சமூகம், மாவட்டம், தேசியம் என்ற வகையில் அமுல் படுத்த வேண்டும் எனவும்அச்சுற்றறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேலும் இத்தினங்களில் பாதுகாப்பான சூழலை ஏற்படுத் தும் நோக்கில், மக்கள் கூடும் பொது இடங்களான சந்தைகள், பாடசாலைகள், வைத்தியசாலை கள் போன்றவற்றில் சிரமதான நிகழ்வுகளைநடாததுமாறும் பணிக்கப் பட்டுள்ளது.

மக்களிற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், ஆய்வுப்பட்டறைகள், மாணவர்க்கிடையிலான போட்டிகள் போன்றனவும் இக்காலப்பகுதியில் இடம்பெறவுள்ளன. (உ-252)

# இலங்கைத் தேயிலை ஏற்றுமதி வீழ்ச்சி

(கொழும்பு)

ஈராக்கில் இடம்பெற்றுவரும் யுத்தம் காரணமாக இலங்கைத் தேயிலை ஏற்றுமதியில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைத் தேயிலையை இறக்குமதி செய்யும் முக்கிய நாடாக ஈராக் விளங்குவதாலும், ஏனைய வளைகுடா நாடுகள் தேயிலை இறக்குமதியைக் குறைத்துள்ளதாலும் தேயிலை ஏற்றுமதியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

கொழும்பில் ஏலவிற்பனைக்கென விடப்பட்ட மொத்த தேயிலையில் அரைப்பங்கு தேயிலை மட்டுமே ஏலத்தில் விற்கப்பட்டதாகவும்.

இதேவேளை, தாழ்ந்த பிரதேச தேயிலையின் விலை கிலோவுக்கு 20 ரூபாவால் குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.(உ-5)

முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலாஅ தவர்.

-குறள்-

# வலம்புரி

## தமிழருக்கே ஆபத்து

குற்றச் செயல்கள் தடுப்புச் சட்ட மூலம் நாட்டின் அரசியல் சட்டத்திற்கு எதிரானதல்ல என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.நீதிமன்றத்தின முடிவு பாராளுமன்றத்தின் பிரதித் தலைவர் ஸ்ரீஅந்திரகென்னத்தினால் பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

குற்றச் செயல்கள் தடுப்புச் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுமாயின் திட்டமிட்ட குற்றச் செயலொன்றில் சம்பந்தப்பட்டவரென்று பொலிஸார் சந்தேகிக்கும் ஒருவரை பிடியாணை இன்றிக் கைது செய்து 24 மணித்தியாலங்கள் தடுத்து வைக்க முடியும். இதன் பின்னர் மஜிஸ்ரேட் முனனிலையில் ஆஜர் படுத்தப்படும் அவர், பொலிஸார் கோருமிடத்து மேலும் 7 நாட்களுக்குத் தடுத்து வைக்கப் படலாம்.

இதேவேளை திட்டமிட்ட குற்றச் செயலை செய்ததாக சந்தேகிக்கப்படும் நபர், ஜூரிகள் அற்ற உயர் நீதிமன்றத்தில் நீதியரசர் ஒருவர் முன்னிலையில் விசாரிக்கப்படவும் முடியும்.அத்துடன் குற்றம் சாட்டப்பட்ட நபர் எந்த வகையிலும் உரிய காலத்திற்கு முன்னர் விடுவிக்கப்படவும்மாட்டார்.

இத்தகைய சட்ட மூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுமாயின் அது பின்வரும் விளைவுகளை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக அமையும்.

பொலிஸாரின் அதிகாரம் உச்சமடையும். இதனால் பொலிஸார் தமது அதிகாரங்களைச் துஷ்பிரயோகம் செய்வதற்கு வாய்ப்பளிக்கும்.

★ பொலிஸார் தமது தனிப்பட்ட கோபதாபங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு இச் சட்ட மூலம் உதவி செய்கிறது.

★ பணக்காரவர்க்கமும்,மற்றும் செல்வாக்கு மிக்கவர்கள், அரசியல் வாதிகள் போன்றோரின் ஆதிக்கம் பொலிஸார் மூலம் பிரயோகிக்கப்படும் போது. சாமானிய மக்கள் இச் சட்டத்தின் மூலம் கைது செய்யப்படவும்,தண்டிக்கப்படவும் கூடும்

★இவையாவற்றுக்கும் மேலாக மேற்படி குற்றத் தடுப்புச் சட்ட மூலம் இன ரீதியான வேற்றுமைப்பாட்டிற்கு மேலும் உற்சாகம் அளிப்பதாகவும் சிறுபான்மையினரை நசுக்கவும் வழி வகுக்கும்.

நாட்டின் ஒழுங்கு,சட்டம், நிர்வாகம் என்பனவற்றைப் பாதுகாக்கும் கடமைப்பாடு பொலிஸாருக்கு உண்டென்பதில் மாறுபட்ட கருத்திருக்க முடியாது.அதேவேளை கடமையில் ஈடுபட்டுள்ள பொலிஸார் எல்லோரும் நேர்மையானவர்களாகவும் சட்டங்களை மதிப்பவர்களாகவும் இருப்பார்கள் என எடுகோள் எடுக்க முடியாது.

பொலிஸாரும் பல்வேறு சட்டமீறல் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளனர்.இத்தகைய நிலைமையில் பொலிஸாரிடம் அதிகாரத்தை குவிப்பது மனித உரிமை மீறல்களுக்கே வழிவகுப்பதாக இருக்கும்.இதேவேளை குற்றத் தடுப்புச் சட்ட மூலம்,பயங்கரவாதத் தடைச் சட்டம்,அவசரகாலச் சட்டம் போன்றவற்றின் ஓர் பிரதியீடாகவும் இருக்குமென்பதால் பேரினவாதத்தின் இரும்புக் கரங்கள் மீண்டும் தமிழ் மக்களை நசுக்குவதற்கு இச் சட்ட மூலம் உதவியாக இருக்கும்.

# அடுத்த கட்ட போர் நடவடிக்கை பற்றி ஆலோசித்து தயார் செய்யவே 6 நாள் இடைநிறுத்தம்

ஈராக் மீது அமெரிக்கா நடத்தி வரும் தாக்குதலுக்கு சமீப நாட்களாக ஈராக் படையினர் தக்க பதிலடி கொடுத்து வருகின்றனர். இதனால் பதிலடியை தாக்கு பிடிக்க முடியாமல் திகைத்துப் போன அமெரிக்கா, தரை வழித்தாக்குதலை ஒரு வார காலம் நிறுத்தி வைக்க உத்தர விட்டுள்ளது. இருப்பினும் அமெரிக்கா வான்வெளித் தாக்குதலைத் தீவிரப் படுத்தியுள்ளது.நேற்று இந்த தாக்குதல் மேலும் உக்கிரமடைந்தது. கடந்த11 நாட்களாக பக்தாத் நகரம் மீது குண்டு மழை பொழிந்தும், அந்த நகரை அமெரிக்க கூட்டணி படையினரால் கைப்பற்ற முடியவில்லை. இந்த நிலையில் ஞாயிறு 11வது நாளாக பக்தாத் நகரம் மீது விமானத் தாக்குதல் நீடித்தது. இதுவரை இல்லாத அளவிற்கு அமெரிக்க விமானங்கள் அணி அணியாக பக்தாத்தின் மையப் பகுதியையும் புறநகர் பகுதியையும் குறி வைத்து தாக்கின.

இந்த தாக்குதலில் நூற்றுக் கணக்கான குண்டுகள் வீசப்பட்டன. ஏவுகணைகளும் சரமாரியாக பாய்ந்து ஈராக்கின் இலக்குகளை பதம் பார்த்தன. இந்த இடைவிடாத தாக்குதலால் பக்தாத் நகரம் முழுவதும் கடும் புகை மண்டலத்தில் மூழ்கியது. நேற்று முன்தினம் அதிகாலை பக்தாத் நகரம் மீது அமெரிக்க படைகள் சுமார் 10 அதி சக்தி வாய்ந்த குண்டுகளைப் போட்டதால் அந் நகரமே அதிர்ந்தது. பக்தாத்தின் வடமேற்கே சுமார் 30 குண்டுகள் ஞாயிறன்று காலை வீசப்பட்டன. அதிகாலை பக்தாத்தின் மையப் பகுதியில் ஒன்றன் பின் ஒன்றாக 4 குண்டுகள் விழுந்தன. இதில் சதாம் ஹுசைனின் மகன் குவாசியின் மாளிகை பலத்த சேதம் அடைந்தது. இது தவிர தலைநகர் பக்தாத் மற்றும் அதன் புறநகர் பகுதிகளை குறி வைத்தும் அமெரிக்க கூட்டணி படைகள் இடைவிடாமல் குண்டுகளை வீசின. விமான எதிர்ப்பு பீரங்கி குண்டு சத்தமும் கேட்ட வண்ணம் இருந்தது. அமெரிக்கா நேற்றுக்காலை விமான தாக்குதலை தொடங்கியது. முதல் நகர் முழுவதும் சைரன் ஒலி எழுப்பப்பட்டது. இதனால் நகரமே கடும் இரைச்சலுடன் காணப்பட்டது. சில இடங்களில் அமெரிக்க விமானங்களை குழப்பமடையச் செய்வதற்கும் தாக்குதலில் இருந்து தப்பிப்பதற்கும் ஈராக்கியர்கள் எண்ணெய் தொட்டியில் தீ வைத்தனர். இந்த தீயினால் எழுந்த புகை மண்டலத்தால் அப்பகுதியே மறைந்து காணப்பட்டது. பஸ்ரா நகரில் அதிகாலை 4 மணிவரை தொடர்ச்சியாக குண்டுகள் விழுந்தவாறே இருந்தன. பஸ்ரா நகரின் 3 முனைகளிலும் இங்கிலாந்து படைகள் சுற்றி வளைத்துள்ளன.

இதனிடையே ஞாயிறன்று இரு அமெரிக்க ஹெலிகொப்டர்களை சுட்டு வீழ்த்தியதாகவும், அதில் இருந்த 2 பைலட்டுகள் கொல்லப்பட்டதாகவும் ஈராக் நேற்று தெரிவித்துள்ளது.இந்த அமெரிக்க படை வீரர்கள் போர்க்களத்திலேயே புதைக்கப்பட்டனர். எனவும் அந்நாடு தெரிவித்துள்ளது.

"அபாச்சி ரக ஹெலிகொப்ரர்களில் ஒன்றை ஈராக் பழங்குடியின மற்றும் இதர வீரர்களும் இணைந்து சுட்டு வீழ்த்தியுள்ளனர். இதில் இருந்த இரு அமெரிக்க பைலட்கள் கொல்லப்பட்டனா. மற்றொரு ஹெலிகொட்டரை மத்திய ஈராக்கிலுள்ள கசாப் பகுதியில் ஈராக் படையினர் சுட்டு வீழ்த்தினர். எனினும் இதில் வந்த பைலட்களின் நிலை என்ன என்பது தெரியவில்லை. கொல்லப்பட்ட இந்த இரு அப்பாச்சி பைலட்களும் அமெரிக்க முறைபபடி புதைக்கப்பட்டனர். இதே போல் தான் புதைக்கப்படுவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். ஆனால் அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகனோ அமெரிக்க ஹெலிகொப்ரர்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக எந்த தகவலும் இல்லை என தெரிவித்துள்ளது.

### புதிய பாதுகாப்பு முறை

ஈராக்கின் ஏவுகணைத் தாக்குதல் அதிகரித்துக் கொண்டே போவதால் அதிலிருந்து தனது நாட்டைப் பாதுகாக்க புதிய பாதுகாப்பு முறையை குவைத் ஏற்படுத்தவிருக்கிறது. அதி நவீன ஏவுகணை-எதிர்ப்பு முறையை குவைத் தனது நாட்டில் நிறுவவிருக்கிறது. ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்து நேற்றுடன் 11 நாட்கள் ஆகிவிட்டன. ஈராக்கில் தரைவழி தாக்குதலை தற்காலிகமாக நிறுத்தியுள்ள அமெரிக்கா, வான்வெளித் தாக்குதலை தற்போது மேலும் தீவிரப்படுத்தி இருக்கிறது. பக்தாத்தில் நேற்று அமெரிக்கப் படைகள் விடிய விடிய குண்டு மழை பொழிந்தன.

அமெரிக்கப் படைகள் தங்கள் ஆயுதங்களையும் வெடிகுண்டுகளையும் குவைத் நாட்டில் தான் குவித்து வைத்திருக்கிறது. இதனால் ஆத்திரம் அடைந்துள்ள ஈராக் குவைத் நாடு மீது ஏவுகணை வீசி தாக்கி வருகிறது.

இதுவரை குவைத் மீது 15 முறை ஏவுகணைகள் வீசப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் கூட குவைத மன்னர் அரண்மனை அருகே ஒரு ஏவுகணை வந்து விழுந்தது. இதில் ஒருவருக்கு கால் போனது. மற்றொரு நபருக்கு கை போய் விட்டது. குவைத்தில் உள்ள ரேடார்கள் ஈராக் ஏவுகணைகளை கண்டு பிடிக்கத் தவறிவிட்டன. காரணம் இந்த ஏவுகணைகள் மிகவும் தாழ்வாகப் பறந்து வருகின்றனவாம். எனவே ஈராக்கின் ஏவுகணைத் தாக்குதலில் இருந்து தப்பிக்க புதிய பாதுகாப்பு முறையை குவைத் ஏற்படுத்த உள்ளது.

நாட்டை காக்க நாங்கள் எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வோம். எந்த ஒருமுயற்சியையும் விட்டு வைக்க மாட்டோம். அதி நவீன ஏவுகணை தடுப்பு முறையை கொண்டு வருவோம். விரைவில் இது செயல் படுத்தப்படும் என குவைத்தின் உயர் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈராக்கின் ஏவுகணை தாக்குதலால் குவைத் அரண்டு போயிருக்கிறது. குவைத் மக்கள் பீதியில் இருக்கிறார்கள். குவைத்தில் 3 லட்சத்து 50,000 இந்தியர்கள் உள்ளனர். இவர்களுக்கு எந்தப்பிரச்சினையும் வராது என குவைத்திற்கான இந்திய தூதர் தெரிவித்தார்.

கூட்டணிப் படைகளுக்கான அத்தியாவசியப் பொருட்கள் குவைத்திலிருந்து தான் வருகின்றன.

இவைபோதிய அளவு வராத காரணத்தால் போர் முனையில் உள்ள அமெரிக்கக் காலாட்படைப் பிரிவுக்கு உணவுப் பொருள் உள்ளிட்டவற்றின் விநியோகத்தில் வெட்டு விழுந்துள்ளது. குறைந்த அளவிலேளிபொருளை உபாயோகிக்கும் படியும் அதனிடம் கூற வேண்டியதாயிற்று.

தரைவழித் தாக்குதல் நிறுத்தப்படும் இந்த 6 நாளில் கூட்டணிப் படையினர் ஈராக்படைகள் மீது வான் வழித் தாக்குதலை நடத்துவர். அதன் பிறகு பக்தாத் மீது தாக்குதல்நடத்தப்படும் என்று சில அதிகாரிகள் தெரிவித்தனர்.

கட்டாரில் உள்ள போர்க்கட்டுப்பாட்டுத தலைமையகத்தில் பிரிட்டிஷ் படைகளின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக படைவீரர்களைத் தயார் படுத்திக் கொள்ள வேண்டியதும், அவர்களுக்குத் தேவையான பொருள்களைச் சேர்ப்பதும் அவசியம் என்று குறிப்பிட்டார். ஆனால் 6 நாள் போர் நிறுத்தம் பற்றி அவர் எதையும் உறுதி செய்யவில்லை. போர்த் திட்டம் திட்டமிட்டபடி செயல் படுவதாகவும் அவர் சொன்னார்.

வாஷங்டனில் அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் கூறுகையில், இந்த ஆறு நாளில் கூட்டணிப் படைகள் எதுவும் செய்யாமல் வெறுமனே பொழுதைக் கழிக்கும் என்று கூறுவதை ஏற்க முடியாது என்றார்.

பிரிட்டிஷ் இராணுவ தளபதி மைக் ஜாக்சன் லண்டனில் நிருபர்களிடம் வெள்ளிக்கிழமை பேசுகையில், குவைத்திலிருந்து ஆரம்பத்தில் வேகமாக முன்னேறிய கூட்டணிப் படைகள் பின்னர் சிக்கலில் மாட்டிக் கொண்டதாக வெளியாகும் செய்திகளை ஏற்க மறுத்தார்.

அடுத்த நடவடிக்கை பற்றி யோசித்து தயார் படுத்திக் கொள்ளவே இந்த 6 நாள் போர் நிறுத்தம். அவ்வப் போது இடைவெளி கொடுத்து நிலைமைக்கு ஏற்றபடி தயார் படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

நசிரியா வழியாக கூட்டணிப் படைகளுக்கு அத்தியாவசியப் பொருளை ஏற்றி வருவது அமெரிக்கப் படைகளுக்குச் சிரமமான பிரச்சினை ஆகி விட்டது. அப்பகுதி முழுவதும் சதாம ஹுசைனின் தற்கொலைப் படைகள் திடீர் தாக்குதல் நடத்துகின்றன.

இந்த வாரத்தில் நசிரியா வழியாக அத்தியாவசியப் பொருளை ஏற்றி வந்த வாகனங்களை அப்படைகள் கடுமையாகத் தாக்கி நிலை குலையச் செய்தன.

எனவே, சாலை வழியாக அத்தியாவசியப் பொருள் ஏற்றி வருவதைத் தவிர்க்க நஜாப் நகரம் அருகே பாலைவனப் பகுதியில் விமான தளம் ஒன்றை அமைத்து விமானங்களை தரை இறக்க அமெரிக்கப் படைகள் ஏற்பாடு செய்துள்ளன. (பி)

# புலிகளை அமெரிக்கா பேச்சுக்கு அழைக்கும்

(கோட்டை)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்காக அவர்களின் குழுவொன்றை விரைவில் வாஷிங்டனுக்கு வரும்படி அமெரிக்கா அழைக்கவிருப்பதாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

இந்தப் பேச்சுக்கள் ஏப்ரல் 14ஆம் திகதியளவில் அமெரிக்க இராஜாங்க அமைச்சின் துணை இராஜாங்க அமைச்சர் றிச்சார்ட் ஆர்மிடேஜ் தலைமையில் நடக்கக் கூடும் என்றும்,சுமார் 30 நாடுகளின் சிரேஷ்ட பிரதிநிதிகள் அதில் கலந்து கொள்வார்கள் என்றும் இதில் இந்தியாவும் பங்கு பற்றக் கூடும் என்றும் அச்செய்தி கூறுகின்றது.

சர்வதேச உதவி வழங்கும் அமைப்புகளும் மனிதாபிமான குழுக்களும் இதில் கலந்து கொள்ளக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிகழ்வில் இந்தியா புலிகளுடன் அமர்ந்து செயல்பட மாட்டார்கள் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிப்பதாகவும் அச்செய்தி கூறியது. (பி)

# கசிப்பு விற்கும் கும்பலினால் கசிப்பொழிக்கும் குழுவுக்குத் தண்டனை!

(கொழும்புத்துறை)

சுன்னாகம் பகுதியில் கசிப்பு விற்கும் கும்பல் கசிப்பொழிக்கும் குழுவினரிற்கு ஒரு மணித்தியாலம் வெயிலில் இருத்தி தண்டனை கொடுத்துப் பயமுறுத்தியுள்ளனர். கசிப்பொழிக்கும் குழுவினர் மன்னிப்புக் கேட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர்.

இக்கசிப்பொழிக்கும் குழுவினர் குடிகாரர் போன்ற பாவனையிலேயே மேற் குறிப்பிட்ட இடத்திற்கு சென்று உளவறிந்த போதே கசிப்பு விற்கும் கும்பலிடம் மாட்டிக் கொண்டனர். அண்மைக்காலங்களில் பல் வேறு பகுதிகளிலும் பரவலாக கசிப்பு விற்பனை செய்வது குறிப்பிடத் தக்கது. (பி-51)

### சிங்கராஜ வனத்தை பாதுகாக்கும் நடவடிக்கை

(கொழும்பு)

சிங்கராஜ வனத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக லங்கா தீப நிறுவனத்தின் சிங்கராஜ வனப் பரிபாலன நிதியம் தெரிவித்துள்ளது.

இவ்வனத்தில் வாழும் உயிரினங்களை அழியாமல் தடுப்பதே பிரதான நோக்மெனக் கூறப்படுகின்றது.(பி-10)

## தினசரி தியானம்

### கடவுட்பற்று

வாழ்க்கையின் நோக்கத்தைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் இலட்சியத்துக்கு ஏற்ற வேலைகளை அமைத்துக் கொள்ளுங்கள். உங்கள் குறிக்கோளை எப்போதும் முன்வைத்துக் கொள்ளுங்கள். அதற்கேற்ப ஒவ்வொரு வினாடியும் முயற்சி செய்யுங்கள். கவனயீனம், மறதி ஆகியவற்றை நீக்க உறுதி கொள்ளுங்கள். உங்கள் ஆற்றலிலும் வினைத்திறனிலும் நம்பிக்கை வையுங்கள். இந்த நோக்கத்தை அடைவதற்குக் கடினமாக உழைக்க வேண்டும்.

மனம் இறைவனிடம் ஆழமாக ஈடுபாடு கொள்ளும்படி வைத்து அதனைத் தீவிரமாக ஒருமுகப்படுத்தினால், கடவுட் பற்றாகிய சுடரைத் தூண்டி விடலாம்.

சுவாமி சிவானந்தர்

## தவக்கால நற்சிந்தனை

**"படைப்புகளின் ஆண்டவர் நம்மோடு இருக்கிறார் யாக்கோபின் கடவுளே நமக்கு அரண்"**

சில நாட்கள் மருத்துவமனையில் சாதாரண நோயினால் அவதிப்படுவோர் கூட வாழ்வில் நம்பிக்கையையும் இறைவன் இருந்து செயலாற்றுகிறார் என்ற விசுவாசத்தையும் இழந்திருக்கிறார்கள். இதோ 38 ஆண்டுகளாக படுக்கையிலே கிடந்தவன், வாழ்விற்காக காத்து நொந்து போனவன் தன் நம்பிக்கையை இழக்கவில்லை. விசுவாசத்தில் சலிப்படையவும் இல்லை. பல ஆண்டுகளாக துன்பப்படினும் நலமடைய வேண்டும் என்ற ஆர்வம் துடிப்புடன் செயலாற்றியது. நாம் விசுவாசத்தில் துடிப்புடன் இயங்கும் போது இறைவன் இரட்டிப்பாய் நம்மில் செயல்படுகிறார்.

வெற்றியான வாழ்விற்கு ஆர்வம் மிக அவசியம். எத்தனை ஆண்டுகள் ஆனால் என்ன, அத்தனையும் இயேசுவிற்கு சாத்தியமே. கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை என்பது மரியாள் நமக்கு சொல்லித் தந்த பாடம். நான்கு நாள் ஆன நாற்றமடித்த பிணம் கூட லாசரில் உயிர் பெற்றது. விடாமுயற்சி, நம்பிக்கை, விசுவாசம் ஆகியவை இருப்பினும் படைகள் என்ன, தடைகள் என்ன, நோய் நெருக்கடிகள் என்ன, மந்திர தந்திரங்கள் என்ன எந்த எதிர்ப்பு வந்தாலும் எந்த எதிர்ப்பு சக்திகளாலும்ஒன்றும் செய்ய இயலாது.

காவலன்

# வீட்டின் மீது குண்டு வீசியதில் கணவனும் மனைவியும் காயம்!

## மட்டக்களப்பில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புத்தூர்ப் பகுதியில் நேற்றுமுன்தினமிரவு இனம் தெரியாதோர் மேற் கொண்ட குண்டுத் தாக்குதலில் வீட்டில் இருந்த கணவனும் மனைவியும் காயமடைந்துள்ளனர்.

இச் சம்பவத்தில் கே.வேலுப்பிள்ளை(வயது42)வே.தனலட்சுமி (வயது41)ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.இவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் விடுதலைப் புலிப் போராளி ஒருவரின் பெற்றோர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதுஉயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள புத்தூர்ப் பகுதியிலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதேவேளை,இச் சம்பவம் இடம் பெற்ற பகுதியில் விமானப் படைத் தளம்,இராணுவப் படைத் தளம் மற்றும் அரசியல் கட்சிகளின் அலுவலகங்கள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# சிஹல உறுமயவுக்கு வானொலி நடத்த அரசு அனுமதி வழங்கும்?

(கொழும்பு)

சிஹல உறுமயக் கட்சி வானொலிச் சேவை ஒன்றினை நடத்துவதற்கான அனுமதியை வழங்குவது தொடர்பாக அரசு ஆராய்ந்து வருவதாக தெரியவருகிறது.

விடுதலைப் புலிகளுக்கு சக்தி வாய்ந்த வானொலிச் சாதனங்களை வழங்கி வானொலிச் சேவைக்கு அனுமதி வழங்கியது போல் தமக்கும் அனுமதி வழங்குமாறு சிஹல உறுமயக் கட்சி அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக கட்சியின் செயலாளர் உதயகமன்பில தெரிவித்துள்ளதுடன் இம் மாதம் 4ம் திகதி தொடர்பாடல் அமைச்சின் செயலாளரை சந்திக்கப் போவதாகவும் இச் சந்திப்பின் போது கட்சியின் சட்ட ஆலோசகர்கள் மற்றும் விஞ்ஞானிகளும் கலந்து கொள்ளவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

# ஆயுதங்களுடன் வந்த இளைஞர்கள் வாக்களிக்க விடாது துரத்தினர்

## உடத்தலவின்ன படுகொலைவழக்கில் சாட்சி

(கொழும்பு)

ஆயுதங்களுடன் வாக்குச் சாவடிக்கு வந்த இளைஞர்கள் பொ.ஐ. முன்னணி ஆதரவாளர்களைத் தவிர மற்ற அனைவரையும் வாக்களிக்க விடாது துரத்தி அடித்தனர்.

இவ்வாறு உடத்தலவின்ன படுகொலை வழக்கு விசாரணை நேற்று நடை பெற்ற போது சாட்சியமளித்த கண்டி கிங்ஸ்வுட் கல்லூரியின் உப அதிபரும், தேர்தல் அதிகாரியாக கடமையாற்றியவருமாகிய சுகந்திப் படுகொட தெரிவித்தார்.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகள் எரிக் பஸநாயக்க, தீபாளி விஜயசுந்தர,சுனில்ராஜபக்ஷ ஆகியோர் முன்னிலையில் விசாரணை நடை பெற்ற போது சாட்சி மேலும் தெரிவித்ததாவது;

ஒரு வாக்குச் சாவடிக்கு தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரோ, அல்லது தேர்தல் பொறுப்பதிகாரியோ வரமுடியும்.ஆனால் சட்டத்திற்கு மாறாக ஆயுதமேந்திய இளைஞர்கள் அங்கு வந்து எமது கடமையைச் செய்யவிடாது தடுத்தனர் ஆயுதங்களுடன் வந்த இளைஞர்கள் யாவரும் ஒரே விதமான உடைகளையே அணிந்திருந்தனர்.அவர்கள் அங்கிருந்த தேர்தல் அதிகாரி ஒருவரின் சேட் கொலரில் பிடித்து இழுத்தனர்.

இவை நடந்து முடிந்த பின்னர் அரை மணிநேரத்தில் அங்கு 200 வரையான பொ.ஐ.முன்னணி ஆதரவாளர்களான பெண்கள் வந்து வாக்களித்து விட்டுச்சென்றனர்.

காலையில் வந்த இளைஞர்கள் அதிகமான வாக்குச் சீட்டுக்களை தாமே நிரப்பி அவற்றை வாக்குச் சீட்டுப் பெட்டிக்குள் போட்டனர் எனவும் தெரிவித்தார். (இ)


**NEW YEAR SALES.... SALES...**

இனிய புத்தாண்டை முன்னிட்டு லைடனின் அதிரடி மலிவு விற்பனை. லைடனில் சகல விதமான பொருட்களையும் விசேட விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.

இவ்விலைக்கழிவு

**25.03.2003 - 14.04.2003**

வரை மட்டுமே

இன்றே நாடுங்கள்:

**லைடன் புடைவை நிலையம்**

410, ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.

T.P.No. 021 222 2381 (C/5879)



**IMS**

**Institute of Micro Systems**

**Market Lane, Manipay.**

கணனிக் கற்கை நெறிகள் ஆரம்பம்



05-04-2003

* பாடசாலை மாணவர்கள்.
* அலுவலக உத்தியோகஸ்தாகள்.
* கணனிசார் தொழில் புரிவோர்கள்.

போன்றோர்களுக்காக ஒழுங்கமைக்கப்பட்ட விசேட கணனி வகுப்புக்கள் காலை 6.00 முதல் மாலை 8.00 வரை நடைபெறும்.

விண்ணப்ப படிவங்கள் கிடைக்கும் இடங்கள்

* IMS கல்வி நிறுவனம்.
* அபிநயா மல்ரி எலக்ரோனிக்ஸ் மானிப்பாய்.
* காயத்திரி பன்சி கவுஸ் - மானிப்பாய.
* விநாயகர் ஸ்ரோர் -ஆனைக்கோட்டை.

IMS. Institute of Micro Systems. Market Lane, Manipay.


### சர்ச்சைக்கு...

நீக்குங்கள் என்று எத்தனை தடவை பாராளுமன்றத்திலும் வெளியிலும் வலியுறுத்திப் பேசினேன்.ஒரு தடவை பாராளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சரைப் பார்த்து ''பளைப் பிரதேசத்தை பத்து ஆண்டுகள் சென்றாலும் உங்களால் மீளப் பிடிக்க முடியாது'' என்றும்''ஆனையிறவைப் பிடிப்பது வெறும் பகற் கனவு''என்றும் கூறியுள்ளேன். இன்னொரு தடவை பாதுகாப்பு அமைச்சரை நேரடியாகவே சபையில் வைத்து 35 ஆயிரம் இராணுவத்தினரின் உயிரைக் காப்பாற்றித் தாருங்கள் என்று வெளிநாட்டு அரசுகளை மீண்டும் மண்டியிட்டுக் கேட்க வேண்டிய சந்தர்ப்பம் வராது என எண்ணாதீர்கள் என்று இப்படி எத்தனையோ தடவைகள் விடுதலைப் புலிகளின் சார்பில் தனித்து நின்று பேசியுள்ளேன். மேலும் பாராளுமன்றத்தில் பார்வையாளராக வருகை தந்த நோர்வேயின் விஷேட தூதுவர் எரிக் சொல்ஹேயிம் அவர்களை சிஹல உறுமயக் கட்சியின் தலைவர் திலக் கருணாரட்ண மிக மோசமாக விமர்சித்தபோது ஆளும் கட்சியிலும் சரி,எதிர்க் கட்சியிலும் சரி உறுப்பினர்கள் பேசாதிருந்த போது,நானே எழுந்து நாட்டு மக்கள் சார்பில் மன்னிப்புக் கேட்டதுடன் அவரது பணிகளின் அவசியத்தையும் சமாதானத்தின் தேவையையும் வலியுறுத்திப் பேசியதையும் அதற்காக சிங்கள இனவாதிகளிடம் அன்றிரவு முழுவதும வாங்கிக்கட்டியதை நினைவு கூருவது பொருத்தமானதாகும். எரிக் சொல்ஹேய்ம் அவர்களை நான் நோர்வேயில் தனியே சந்தித்துப் பேசிய போது நான் விடுதலைப் புலிகள் குறித்து என்ன பேசினேன் என்பதை அவரிடமே கேட்டு அறிந்து கொள்வது நல்லது இவற்றை யாராலும் மறுக்க முடியாது.இவையெல்லாம் எனது பிதற்றலா?உளறலா?அல்லது தங்களை பெரும் உத்தமர்கள் எனக் கூறிக் கொண்டு எனது வார்த்தைகளை உளுத்துப் போன அரசியல் என்று கூறுவது போல உளுத்துப் போன வார்த்தைகளா?

நான் விடுதலைப் புலிகளின் தியாகத்தையும் அர்ப்பணிப்புக்களையும் மதிக்கின்றேன்.எமது கட்சிக்கு ஏற்பட்ட கசப்பான சில அனுபவங்களை எல்லாம் மறந்து தமிழ் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு களத்தில் நின்று போராடி தியாகங்கள் செய்த தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டும் தான் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்பதில் மிக உறுதியாக இருக்கின்றோம்.இது தான் தேர்தலுக்கு முன்பு நாம் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் கூட்டமைப்பிலுள்ள நான்கு கட்சிகளில் கூட்டணி தவிர்ந்த மூன்று கட்சிகள் தாம் கையெழுத்திட்ட தேசிய பட்டியல ஒப்பந்தத்தை அறியாது பிதற்றியது போலவே தற்போதும் தாம் கையெழுத்திட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவாகக் கூறப்பட்டிருப்பதை அறியாது கருத்துக் கூறுகிறார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தான் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்று கூறுகின்ற உரிமை நான் அறிந்த வரை ஒருவருக்குத் தான் உண்டு. அவர் ஈரோஸ் பாலகுமார். அவர் தான் விடுதலைப் புலிகளை ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டு தனது இயக்கத்தை முடக்கி வைத்து விட்டு விடுதலைப் புலிகளின் அங்கமாக இணைந்து கொண்டு அவர்களுடன் இயங்கி வருகிறவராவார். இதனால் அவர் ஒருவர் தான் அந்த உரிமையையும்,தகுதியையும் பெற்றிருக்கின்றார்.இந்த விடயத்தில் என்னை விமர்சித்து அறிக்கை விடுபவர்கள் திரு.பாலகுமாரை முன்னுதாரணமாக ஏற்று செயற்பட முன்வருவார்களா?

விடுதலைப் புலிகளும் அரசும் இனப் பிரச்சினை சம்பந்தமாக பேச்சு நடத்திக் கொண்டிருக்கும் இவ்வேளையில் அம் முயற்சிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி எதுவித இடைஞ்சல்களையோ முட்டுக் கட்டைகளையோ போடாமல் அவர்களுக்கு ஓர் உந்து சக்தியாக இருந்து பூரண ஒத்துழைப்பை வழங்கும் என்பதை மீண்டும் வலியுறுத்தி இப் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்கவும் விரும்புகின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார். (இ)

# கூட்டமைப்பினர் பிரதமரைச் சந்திப்பர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான காணியில் அமைக்கப்படவுள்ள பாரிய இராணுவ முகாம் தொடர்பாகவும் அதனை தடுத்து நிறுத்தக் கோரியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுடனும் இவ்வாரம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இப் பேச்சுவார்த்தையை நடத்துவதற்கான திகதியையும் நேரத்தையும் ஒதுக்கித் தருமாறு கூட்டமைப்பினர் பிரதமரையும் பாதுகாப்பு அமைச்சரையும் கேட்டுள்ளனர். (வ)

## கட்டுத் துவக்கு வெடித்து பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

கட்டுத்துவக்கு வெடித்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தி சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் நேற்று இடம் பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த இராமையா சரஸ்வதி (வயது 43) என்பவரே காயமடைந்தவராவார். (த-6)


**தவறிவிட்டது**

நாவற்குழி கிழக்கு,கைதடி எனும் முகவரியைக் கொண்ட சாம்பசிவம் தயாபரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை தவறவிடப்பட்டுள்ளது.(820163958V) கண்டெடுத்தவர்கள் வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம வழங்கப்படும்

(C/5895)


### யாழ்.மாநகர..

நாம் வரவேற்கிறோம்.அதே வேளை யாழ்.மாநகர சபை வளாகத்திலும் அதனை அண்டியுள்ள பகுதிகளிலும் பாரிய இராணுவ முகாம் அமைப்பது யாழ்.மண்ணில பெரும் பதற்றத்தையும் மக்களின எதிர்ப் பலைகளையும் ஏற்படுத்தியுள்ளது.

புதிய இராணுவ முகாம் அமைகக்கப்படவுள்ள இவ் பகுதியில் இரண்டு பிரதான பாடசாலைகள் பொது நூல் நிலையம்,நீதிமன்ற வளாகம்,துரையப்பா விளையாட்டரங்கு என்பன அமைந்துள்ளன.

இந் நிலையில் ஞானம்,சுபாஸ விடுதியில் நிலை கொண்டுள்ள இராணு வத்தினர் வெளியேறுவதை வரவேற் கும் நாம்,யாழ்.நகரின் இதயப் பகுதியில் இராணுவ முகாம் அமைக்கப்படுவதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

யப்பான் தலைநகர் டோக்கியோவில நடை பெற்ற சமாதானப் பேச்சு வார்த்தைகளின் போது இந்த இராணுவ முகாம் அமைப்பது தொடர்பாக எமது கடுமையான ஆட்சேபங் களைத் தெரிவித்திருந்ததுடன் படைமுகாம் அமைக்கும் தீர்மானத்தை மீளப் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் கோரியிருப்பதோடு எம்மோடு கலந் தாலோசித்து யாழ்.மாநகர சபைக் காணக்கு வெளியே தற்காலிக அமை விடம் ஒன்றை தெரிவு செய்யலாம் என்றும் வலியுறுத்திக் கூறியிருந்ததை நினைவு படுத்த விரும்புகின் றோம் என்றும் அக் கடிதத்தில் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. (ம)

### முகாம்...

கையளிப்பதற்கான ஏற்பாடுகளும் மேற கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்படுகின்றது.

இதேவேளை மேற்படி இராணுவ முகாம் அமைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்வேறு அமைப்புக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடு பட்டுள்ளதுடன் குடாநாடு தழுவிய ரீதியில் மாபெரும் போராட்டங்களை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடவும் பொது அமைப்புக்கள் தயாராகி வருகின்றன. (த)

### யார் ஆட்சியில்..

கல்வி தொழில் வாய்ப்பு பதவி உயர்வுகள் ஆகியன சம அளவில் கிடைக்க வேண்டும். இத்தகைய அடிபடை உரிமைகள் மறுக்கப்பட்டதா லேயே பாரிய சிக்கல்கள் தலை தூக்கின என்றும் கூறிய ஜனாதிபதி;

வடக்கு கிழக்கின் புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக உதவிகளை வழங்க முன்வந்துள்ள நாடுகளின் செயற்பாடுகளைப் பாராட் டுவதாகவும் தெரிவித்தார். (வ)


31.03.2003 இன் அதிர்ஷ்டசாலி

இல.147

நியூ சிற்றி ஹாட்வெயர்ஸ்.

ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

JASO PLASTIC (PVT)LTD.

35,Kannathiddy Road,

Jaffna.

0777-110610 (6875)



ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும்

வலம்புரியின் வாரமலர்

**சங்குநாதம்**

* அரசியல் கட்டுரைகள்
* அறிவியல் ஆக்கங்கள்
* கவிதைக் கலசம்
* வியாசரின் பதில்கள்
* மகளிர் உலகம்
* சிறுவர் அரங்கம்
* ஊர்காவற்துறையில் படுகொலை

(திகிலூட்டும் உண்மைச் சம்பவம்)

இன்னும்

தமிழுலகின் தலைசிறந்த எழுத்தாளர்

செங்கை ஆழியான் எழுதும்

ஈழராஜா எல்லாளன்

தொடர்கதை

வாசிக்கத் தவறாதீர்கள்

திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

**சங்குநாதம்**


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.04.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.